Dr. S. Venkatarajan,
L.I.M. (Registered)
SARABENDRA REMEDIES,
19 SAKA NAICK ST.,
NJORE.

4553

தேவிபாதம்.

# தேரையர் கரிசலை
## முந்நூறும்,
## கல்நண்டு சூத்திரமும்,

இவை
பாலயோகி
ஆயுள்வேத பண்டிதருமாகிய
**V. R. சுந்தரம் அவர்களால்**
தஞ்சை அரண்மனை சரஸ்வதிமாலிலுள்ள
ஏட்டுப்பிரதியைக்கொண்டு
பரிசோதிக்கப்பட்டு

In Memory Of

T004553
Sarasvati Mahal Library. Thanjavur

க முதலியாரால்
னை,
பேட்டை,
ந்திரசாலையில்
ட்டன.

1915.

# தேரையர் கரிசலை

## முகவுரை.

இது தேரைய மகாமுனிவரால் அருளிச்செய்யப்பட்ட வைத்திய நூல். வைத்திய வாத கல்ப முறைகளைப் பண்டிதர்களியாவரு மெளிதிலுணருமாறு செவ்வனே கூறுகின்றதென்பது பிரசித்தமாம். பிரசித்தமானதும், மருத்துவர்முதலியோர்க்கு மிகுதியும் பயன்தருவதுமான இந்நூல் தற்காலம் கிடைக்காமையை நோக்கி, யான் பல ஏட்டுப் பிரதிகளைத்தருவித்து, மருத்துவர் - பண்டிதர்கள் முன்னிலையில் செவ்வனே பரிசோதித்துச் சுத்தப்பாடமாக அச்சியற்றி யிருக்கின்றேன். இந்நூலை அச்சியற்றுவதற்குத் தம்மிடத்திருந்த புராதன அச்சுப்பிரதியொன்றைக்கொடுத்துதவிய ஸ்ரீமத்-சிவராமகிருஷ்ண பிள்ளையவர்கட்கு மிகுதியும் நன்றியுடையவனுகின்றேன். இதிற்பிழையுளதேல், நண்பர்கள் அவற்றைத் தயவு செய்து தெரிவிப்பார்களாயின், இரண்டாவது பதிப்பில் திருத்தி அச்சியற்றப்படும்.

கரிசல் என்பது முப்பூவாம். வழலை எனினும் அதுவேயாம். ரவிபீஜம், மதிபீஜம், அக்நிபீஜம் எனினும் ஒக்கும். சவுக்காரம் என்பது உலகவழக்கு.

இந்நூலின் தஞ்சை - அரண்மனை - சரஸ்வதிமாலிலுள்ள ஏட்டுப்பிரதி, சாலிவாகன சஹாப்தம், 1702 ஹு ரவுத்[illegible] ஹு கார்த்திகைமீ சரபோஜ மகாராஜாவின் உத்தரவுப்[illegible]யாரம் கிருஷ்ணநாய்க்கன் குமாரன் ரங்கைய நாய்க்கனால் எ[illegible]ப்பட்டது.

V. K. S.

## கவனிப்பு.

இதுகாறும் வெளிவராத வைத்ய, வாத, மாந்திரீக நூற்கள் மேற்படி அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்டு வருகின்றன, இவ்வச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்படும் நூற்கள், சொற்குற்றம், பொருட்குற்றம், அச்சுப்பிழை முதலியன இன்றிப் பல பண்டிதர்களினுதவியால் சுத்தப் பாடமாக அச்சிடப்பட்டு வருகின்றன வென்பதை விவேகிகள் அறிதல் வேண்டும். சொற்பிழையும், எழுத்துப்பிழையும் மலிந்து, ஆபாசமான காகிதத்தில் அச்சிட்டுச் சொற்பவிலைக்குக் கிடைக்கும் புத்தகங்களைப் படிப்போர் பிழைபட்டுப் போவார்களென்பது திண்ணமாம்.

# அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| பாயிரம் | 1 |
| இரச பஸ்பம் | 7 |
| சாதிலிங்க பஸ்பம் | 8 |
| சுத்திரச பஸ்பம் | 8 |
| வங்க பஸ்பம் | 10 |
| காரீய பஸ்பம் | 11 |
| நாக பஸ்பம் | 11 |
| தாம்பிர பஸ்பம் | 12 |
| வெள்ளி பஸ்பம் | 13 |
| அயச் சிந்தூரம் | 14 |
| உருக்கு பஸ்பம் | 15 |
| வெண்கல பஸ்பம் | 15 |
| ஊசர பஸ்பம் | 16 |
| கெந்தக பஸ்பம் | 17 |
| தங்க பஸ்பம் | 18 |
| நவரத்ந பஸ்பம் | 19 |
| இலவண பஸ்பம் | 20 |
| தாளக பஸ்பம் | 20 |
| வெள்ளைப்பாஷாண முதலான பஸ்பங்கள் | 21 |
| அப்ரக பஸ்பம் | 21 |
| சவுக்காரச் சுன்னம் | 22 |
| அண்டகபீர் | 23 |
| வாதமுனிற | 25 |
| சிந்தூரமணி பஸ்பம் | 28 |

| | |
|---|---|
| ரசகர்ப்பூர பஸ்பம் | 28 |
| வாலரச பதங்கம் | 29 |
| வீர பதங்கம் | 29 |
| சவ்வீரக் கோடாசூரி | 30 |
| ஏலாதி மாத்திரை | 30 |
| விரோசன வாதராக்ஷச குளிகை | 31 |
| சண்டமாருத சன்னிநாதவைரவன் | 32 |
| கபாட மாத்திரை | 32 |
| இராக்ஷச குமேடாரி மாத்திரை | 32 |
| அக்னிகுமாரன் | 33 |
| சுயமக்னி | 33 |
| இரசபூபதி | 33 |
| சுரமாத்திரை | 34 |
| இலகு ஏலாதி | 34 |
| சுரராமபாணம் | 35 |
| குன்மராஷத மாத்திரை | 35 |
| சந்திரோதயமணி | 35 |
| ஆனந்த வைரவம் | 36 |
| கோடாசூரி | 36 |
| பாலசஞ்சீவி | 37 |
| மகாகுமேடாரி | 37 |
| பூமணிக்குளிகை | 38 |
| பிரளயகால வைரவம் | 38 |
| சிலோதாரிமணி சலமஞ்சரி | 39 |
| நிம்பாதி மாத்திரை | 40 |
| தரசங்காரன் | 40 |
| சஞ்சீவி | 41 |
| காளகண்டமேக நாராயண சிந்தூரம் | 42 |

| | |
|---|---|
| ரசச்சிந்தூரம் | 45 |
| காந்தசிந்தூரம் | 45 |
| வங்கசிந்தூரம் | 47 |
| அயச்சிந்தூரம் | 49 |
| ரசச்சிந்தூரம்-திராவகத்தில் | 50 |
| செயரசம் | 51 |
| அப்ரகச்சிந்தூரம் | 51 |
| தாம்பிரச் சிந்தூரம் | 54 |
| ஏமபீஜச் சந்திரோதயம் | 55 |
| பூரணச்சந்திரோதயம் | 58 |
| பாலசந்திரோதயம் | 59 |
| காந்தச்சந்திரோதயம் | 60 |
| சந்திரோதயம் | 62 |
| அப்ரகச் சந்திரோதயம் | 63 |
| லோகசந்திரோதயம் | 64 |
| பூநாகச்சந்திரோதயம் | 66 |
| கெந்தக சந்திரோதயம் | 67 |
| கெந்தகக்கட்டு | 69 |
| தாளகச்சிந்தூரம் | 70 |
| தங்கமுதல் லோகங்கள்புடத்தில் சிந்தூரம் | 71 |
| நவலோகசிந்தூரம் | 72 |
| திரிவங்கசிந்தூரம் | 72 |
| சுவர்ணச்சந்திரோதயம் | 75 |
| சத்துச் சிந்தூரம் | 78 |
| பஞ்சசூதம் | 80 |
| சிறு சந்தனாதித் தைலம் | 81 |
| சந்தனாதித்தைலம் | 81 |
| அசுவகந்தாதித் தைலம் | 82 |

| | |
|---|---|
| அசுவகந்தாதித் தைலம் | 82 |
| அஷ்ட சூரணம் | 85 |
| திராக்ஷாதி சூரணம் | 85 |
| சுகபேதி சூரணம் | 86 |
| அசுவகெந்த ஏலாதி சூரணம் | 87 |
| சங்கத்திராவகம் | 89 |
| மாந்த எண்ணெய் | 90 |

இந்நூல் சிந்தாமணி, திருமூலர் 600-1000, கொங்கணர் 1000, தேரையர் 100, சட்டமுனி வாதகாவியம் 1000; இவையன்றிச் சித்தர் நூல்கள் முறைகளுக்கும் ஒத்திருக்கின்றது. அன்றியும், சரக்குபேதம், எரிப்புபேத முதலிய ஆபாசங்கள் தற்காலத்தில் வெளிவந்திருக்கும் நூல்களிலிருப்பது போன்றிதிலிராது. இந்நூல் மிகப் பிரயாசையுடன் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் யான் எடுத்துக்கொண்ட சிரமம் இப்புத்தகத்தைக் கண்ணுறும் நேயர்கட்குச் செவ்வனே புலப்படும். இரண்டாம் பதிப்பில் ஷை நூலில் உள்ள முறைகட்கிணங்க, வேறு நூல்களுள் உள்ள முறைகளைத் திருஷ்டாந்தங் கொடுத்துப் பதிப்பிக்கப்படும்; மேலும், கடினபதங்கட்கு அர்த்தமும் அதில் கூடியவரை எழுதப்படும்.

இதில் வாதம் வைத்தியம் கல்பமாகிய மூன்றும் விபரமாய்க் கூறப்பட்டிருக்கிறன. இதில் உள்ள முறைகளின் பிரகாரம் சில அருமையான ஔஷதங்கள் முடிந்து அநுபவத்தில் வந்திருக்கின்றன.

V. R. S.

உ

தேவிபாதம்.



ஸ்ரீ லலிதாம்பிகையே நம:.

# தேரையர் கரிசலை.

## முந்நூறு.

### பாயிரம்.

விநாயகர் வணக்கம்.

பூரணி மாமலை மகளருள் புதல்வன்
காரண மாமத கரியடி பணிவாம். (க)

**முருகர் வணக்கம்.**

சூரன் குலமற வேலாற் றுணிமயில்
வீர னறுமுகன் மெல்லடி பணிவாம். (உ)

**சிவன் வணக்கம்.**

அமுத மதியணி சடையினர் விடையின
ரெமதுள முறுமா னிணையடி பணிவாம். (௩)

### உமை வணக்கம்.

ஏர்பதித் துணைவி யென்னித யத்துறும்
பார்பதித் தேவியைப் பார்தனி னினைவாம். (ச)

### திருமால் வணக்கம்.

பூரண புட்கரப் பொற்பதத் தெங்கள்
நாரண னார்திரு நாம நவிற்றுதும். (ரு)

### அகஸ்தியர் வணக்கம்.

மாமுனி மலயத்தில் வாழ்முனி முத்தமிழ்
பாமுனி பொன்னார் பதமலர் பணிவாம். (சு)

### பொருள் வணக்கம்.

ஆதியு மந்தமில் லாத வருஞ்சுயஞ்
சோதியைப் போற்றித் தொகுத்துரைக் குதுமே.

### மூவகை இலக்கணம்,

மாவத் துகைமணி மந்திர மவுடத
மூவத் தொகைவகை முறையறை குதுமே. (எ)

### குளிகை.

மருபாடை மன்குரு மால்கோச பீசமு
மருவண்டம் விட்டெகன் றுய்மை வில்லை
சேயுலத் திலகு புடமுற் றுல்மகா
குருபிலத் தினிலோர் பிரண்டெணி யாகு
மானந்த மூலி யரைத்தப்பி மூன்றுநாள்
தானந்த மரிசிறு நீர்சு வேதனம்
எடுத்திடு நீதா னிறுகிமணி யாகு
மடுத்திடு மத்தங் காயரைத் தெழிற்புடம்
போட்டிடு முப்பதிற் பூட்டி யுருக்கியே
கூட்டி மகிழுமாம் பந்தம் புடமிடு

எடுத்து ருக்கிமணி போற்றம ரிட்டுத்
தொடுத்தசெம் பட்டுநூற் கோர்வைநூற் றெண்
பஞ்சாக் கரிபீஜம் பஞ்சாக் கரபீஜம் [மணி
விஞ்சைமகா வித்தை மேலஷ்ட கர்மமும்
நம்புமை யைந்தா நமசிவா யாதியிற்
றம்பன மோகனம் பேதன மாரணம்
உச்சா டநமும் வசியமா' கருஷணம்
வைச்சிடு மஞ்சினுள் மாறல் வகைசெப
முந்நூற் றிருபத்து நாலிவை சித்தி
பண்ணஷ்ட கர்மம் பலித்திடு மெவ்வகை
நோயு மொழியுநூன் மூன்றுஞ் சித்திக்கும்
ஆயும் பெருகு மவன்முகங் காண்கிலோர்
மாபா விகளோய் மறுகி யொளித்திடும்
கோமா னவுடதங் கொடுக்கப் பலித்திடும்
குளிகையுட் கொள்ளக் கொடுநோய் குறைநோயும்
பழிகொள் பசாசு பறந்திடும் பெரிய
பூத மோடும் பிரமராட் சதையு
மொழிந்திடும் வாதமும் பித்தமு மையமும்
ஜன்னி கிராணி தனுவாத மாக்ஷயம்
வன்னிசேர் மேக மகத்தாங் கிரந்திபுண்
வாதைகொள் சூலை கூறுமற் றோடிடும்
தாதிலப் பிரேதந் தானே யெழுந்திடும்
மணியுள வல்லோர் மருந்துசெய் சித்தி
பிணிக ளொழிந்து பிரானடி சேர்குவர்
தாவடந் தன்னைத் தரித்திட மார்பினில்
மாமுனி யாகுவர் மாவயித் தியரே. (கூ)

## ஔடத இலக்கணம்.

பிரணவ மாயா பீஜ லக்குமி
திரண்மணி பீசஞ்சிந் தாமணி பீஜம்

மன்மத பீஜ மனோன்மணி பீஜம்
பிருதிவி யப்பனல் கால்விண் பீஜம்
ஏழுகோ டிகளுள மந்திர பீஜம்
பீஜம் பன்னோர் பீஜத் துற்பவம்
பன்னோர் பீஜம் பதித்து வதனுடன்
நன்றகத் தீசுர நாதா நமாவென
சர்வ வியாதி விநாச வவுடதம்
சர்வமணி சித்தியாய்ச் சுவாகா சித்திகள்
சித்திக ளிலட்ச முருவே றிடமனச்
சித்திசொல் வாக்கு சர்வசித் தியதாம்
அருடரு மவுடத வகைசித் தியதாம்
பொருடரு மெவ்வகை நோய்போ மிதனால்
தந்திர மாமணி யவுடத வகைசேர்
மந்திர மிறைநூல் மறையறை குதுமே. (௰)
கண்டித மாகிய கலைவல மூவித
பண்டித மவுடத வகையினை யுணர்வாம். (௰௧)
லேகிய பற்பசெந் தூரங் குளிகையுஞ்
சூரணந் தைலம் ரசாயனம் வடகம்
பிட்டுசுண் ணஞ்சயி லெண்ணெய் நீர்குரு
மெழுகும காரசந் திராவகங் குடோரி
நசியங் கபாட முரமிடு வஞ்சனம்
துவாலைசேர் பொட்டணந் தூம்புர மர்த்தனம்
தூம்புர மர்த்தனஞ் சூடுடன் சத்திரம்
ஆம்பெரு மஞ்சரி அமுதமாம் வீரியம்
அட்டையுங் கொம்புங் கட்டிய வத்தியும்
ஏகிய வகையிறை நூல்வழி தேறு
மாகிய வவுடத வர்க்கமுப் பதுவே. (௰௨)

## சாஸ்திர விலக்கணம்.

எழுபத்து மூன்று நூறாயிரத் தெல்லைபுள்
வழுவற்ற வாதமும் பித்தஞ் சிலேத்துமம்
நாலாயிரத்துநானூறுடனாற்பத்தெண்
மேலாம் வியாதியின் சங்கை விளம்புது
மவைதனக் கவுடத வகைநூ லறைகுது
நவமுற் றுயர்வயித் தியர்நாடுகவே, (௰௩)
இரண்டிலட் சந்தமி ழாலே யிசைத்தசொல்
பண்டிதம் பன்னிரண் டாயிரம் பாயிரம்
முன்னூற் சுருக்கிய வெள்ளைநா லாயிரம்
சின்னூல் வைத்திய சிந்தா மணியெனச்
சொல்லிச் சூத்திரத் துள்ளே சுருக்கிய
பல்விய நூற்சூத் திரநூற் பாவினால்
முந்நூறு சூத்திர மாக மொழிகுவ
மின்னீ ரவுடத மேவிளம் புதுமே (௰௪)

## மாணாக்க ரியல்பு.

அருணெறி புக்கு மருட்குர வன்பால்
பொருணெறி யீந்து புகழுப காரம்
பலவகை செய்து பதமலர் பணிந்து
உலவிய மனவாக் குகாயம தொன்றிக்
கவடினை யகற்றிக் கலைபல கேட்டு
நவமுடனேவல் நலம்பெறச் செய்து
இராப்பகற் சேவை யினிதுறச் செய்து
துராங்கா ரத்தின் தொழிலினை மறந்து
மணிமந் திரவவு டதவகை யுணர
பணிசெய்து தீவினைப் பயனது மொழிய
அவுடதம் பலிக்க வருட்டிறஞ் சொலிக்கச்
சிவனடி சேர்ப்பத் திருவரு ளேற்ப

நன்றமி ழாழி நயம்பெறப் பார்ப்ப
முன்வரு சாத்திர முழுதையு முணரக்
குருவருட் பல்வித் தான்மனங் குளிரத்
திருமுக மிருப்பச் செயும்பணி தீர்த்தால்
சாத்திரங் கொடுக்கத் தானதை வாங்கிப்
பார்த்திட மூதுரைப் பயன்பலித் திடுமே. (யரு)
வஞ்சனை மதியா மைமனங் கடுத்தல்
நெஞ்சினிற் பலவகை நிகழ்த்தம துரைத்தல்
உபகா ரம்பல வகைகளொன் றின்றி
அபகா ரத்தா லஞ்சலி மாற்றி
கவருற் றேகடுந் தீவினை செய்துச்
சிவமற் றோர்செயுந் தீவினை யதனல்
தவமுற் றோர்செயுந் தன்மை மறந்து
நவசித் தியோக நற்றன்மை யொழிந்து
கல்வியைக் கேட்டுக் கரணத்தை மறந்து
சொல்புவிக் கள்வர்தம் தொழில்வினை யுணர்ந்து
மூதறி வின்றி மூடமே தோன்றி
ஓதிய குருவை யுறவணங் காமல்
பொய்வகை யதனற் புகழ்பல கற்றல்
மெய்யதும் பொய்யாய் வினைவழி யுற்றே
அனந்த செனன மருநர கிடையே
அனந்த ரவிமதி யளவு முறைந்து
அற்ற மலத்தீ வினையத னலே
பற்றிடு வார்குரு வைப்பணி யாரே. (யசா)

## சித்திக்கு மியல்பு.

ஆதலாற் குருவி னடியிணை பணிய
நீதி யவுடத நெறிபலித் திடுமே. (யஎ)
இருநூற் றிருபத்து நாலு புவனமுஞ்
சிருட்டி திதிசங் காரஞ் செயுமுனி

மாதவர் வேத ரிஷிமகா தேவரும்
பாதம் வணங்கும் பராபர மாமுனி
நெடுங்கட லடங்கலுங் குடங்கையால் வாங்கி
அடங்கலு முண்டுமிழ்ந் தாதிமா முனிசொற்
கதிதருங் கயிலை யம்பதி யென்னும்
பொதிமலை யகத்தியர் போதமா முனியே. (௰௫)

பாயிரம் முற்றும்.

---

## நூல்.

### இரத பஸ்பம்.

பார்புக ழினியொரு சேரொடு சுத்திசெய்
நீரழ லுப்பொடு செங்கலி விட்டெரி
மேலிடு கடமெரி சுடுதழல் தனிலெடு
சாலிடு நீரினை யெடுசரி நிறைபே
எடுவிடு சங்கநீ ரிதிலரை ரவியில்வை
கடுமதி நிறமது காசறை யிருகால்
நீர்தனி விடுநா ளேழுதில் வெகுரணம்
வேர்கெடும் ரணகூ லைகள்வெடி கூலைகள்
திண்படு வரிகிரந் திகள்பல வகைசேர்
புண்படு ரணவிப் புருதிகள் பிளவைகள்
வாதம் படுவ னருமரை யாப்பு
மீத மிரண மேக முதிர
வாய்வுக ணெஞ்சடை வலிரணம் வயிற்றுநோய்
தேயுந் தொடைரண சிராவண முதலாம்
ரணமதில் வருமறு நூற்றுக் கும்வெகு
குணமிகு பாத ரசமதை புள்ளிடக்
களிகடு கருவேல் கருநெல்லி நாவல்
வளிதீ யெரிநீர் வைத்திடு கொப்பளி

வாய்வேக மதுவிடும் வைத்திடு வருகும்
காய்நீர் மிளகுட னிட்டிரு வெண்ணெயை
அதிலிடு குடிரச வீரது அடிபடும்
மதிகுண பாத ரசபற்ப மதற்கே. (க)

**சாதிலிங்க பஸ்பம்.**

வேறு

சாதிலிங்க மீதுசங்க நீரதிற் றுவைத்ததை
வாறுகொண்ட பானைரெண் டடுக்கியே யெரித்திடு
நீறுகொண்ட சங்கநீரி லேயரை யெரியனல்
கூறுகொண்டு கீழுமேலு மேயிருந் திடுமதை
ஆட்டுசங்க நீரிலே யரைத்தெரியோ ரைந்திரம்
நீட்டுகீழ் கடமதில் நிலைத்துநீர தாய்விடும்
சாதிவெல்ல மீதிலீர் பணவிடை யிரண்டுகால்
சேதிசூசி சோகைமாலை பாண்டுடன் மகோதரம்
அட்டகூர்ம வாய்வுதீர வாய்வுநாபி சூலைகள்
கட்டுநீர் மலமடைப்பு கிராணிமூல மாசுரம்
ஓதிய நடுக்கொடுக்கு முற்றமேக வாய்வுடன்
வாததோட சன்னிமா கிரந்திமா முடக்கமு
மண்டவாய்வு மூலவாய்வு தானறும் மகாரசச்
சண்டபற்ப மீதிடப்ர சண்டநோய்க ளோடுமே.

**சூத்திரச பஸ்பம்.**

வேறு.

செங்க லுப்பொடு சாரி பண்ணைநேர்
சீனமா வெடி கார நீர்
செறியு மாவரி குமரி நீர்கள்
செலுத்தி யோர்சேர் சாற்றி னில்
அங்க ரைப்பது மேழு நாளதில்
சட்டை யேமறுஞ் சுத்தி யாம்

அதனை யெடுவடை யதனி விடவகை
யறைய வெருதொழி லறி மினே
கண்ட நீரினிற் காசி டைப்பரி
கடிய வீரமோர் காசி டைக்
கலச மாக வழித் தரைத்தெடு
கட்டி வில்லையைக் காய வை
அண்ட வோடத னுள்ளி விட்டெரி
யரிய காரமோர் மூன் றெடு
அதனி னிடையினி யமுத மதிலரை
யண்ட நீரி லெடுத் திடே. (௬)

நூறு தானிய மதனி னிடையிடு
நீரு காரமோர் மூன்றி னில்
நீரு மாரவி போலவே நிற
மாடி யோரச பற்ப மாம்
வீறுமாவி நெய் தேனி னீருடல்
மெல்வி யாரமு தத் திடு
மேனி தங்கம தாகு மேக
மெலா மறுஞ் சுர வாய்வுமே. (எ)

கோடி யண்ட பவுத்திரங் கெடு
குட்ட மெட்டெ னையறுங்
கொடிய சூலை குலைப்பு மார்சொரி
கூர்ம மான தெலா மறும்
வாடும் வெட்டை மயக்க சன்னிகள்
மட்டி லாவிரு மல் லறும்
வாரி யீளை யிளைப்பு மாக்ஷய
மற்றி நீரிழி வும் மறும்
ஆதி வீரிய விர்த்தி யாமிகு
சோதி போல் விழி சுத்தியாம்

அடைப்பு மூவெழு வெட்டை யால்ரண
மான ரோக மெலா மறு
வாத மெண்பதும் பேத மாவிட
வடிசெய் மாகுறை நோயு டன்
வழிபெ ருத்தவி யாதி யற்றொரு
வச்சி ரச்சட மாகிடும்
தீது நோய்க ளெலாமறும் பெருந்
தீர்ந்தி டாதநோய் கட்கெ லாம்
செயம தாம்ரச பற்ப நற்றனுத்
தின்றி டச்சட நோய றுங்
காதின் மண்டல முண்டி டவெகு
கொடிய மாமத மொழுகிடுங்
கொடிய மாமத கரியி னற்பலங்
கோடி யாம் ரச பற்பமே. (ரு)

**வங்க பஸ்பம்.**

வேறு

மாரச நாற்பல நீர்படு காடிகொள்
மாபுளி நீரொடு மோர் குரநீர்
மாசள கோமியம் வாரெணை மோர்வகை
வார்பதி வாரறு மாத சமே
சாரதி லேழ்வகை தோடம தேயறு
சாய்மதி போல்வரு மானீர் நேர்
தானிதி லேயெடு வாரடி தானுடை
தாளக மேதிரு வீரமு நீ
நீரதி லேயரை மாரச மீதினி
லேதட வேகரி தானுற வே
நீதலர் ஓமம்வெள் ளாடெரு வார்பொடி
கோணியு ளேபொதி மாதிர மாய்

வார்புளி போர்புற ணீயெரு வோடது
மாபுட மேசெய்தே டேக மதாய்
மாதிரு நீறது வாரதி லேயமு
ளீகா ணாதிக ளேசெய் தெடு
வேயது ளேயடை காய்பொடி சீறியெண்
ணேயிட வோர்பண மேயிரு கால்
மேக சலமது மேக மெலாமறு
மேமல நீரடை தூர் சதையும்
காயம தேயெலரி பாவலி கண்ணெரி
காலெரி காய்சுர மீது டனே
காணும தோர்தச நாளினி லேபொதி
மாதவ ளுருரை செய்த துவே. (௬)

**காரீய பஸ்பம்.**

காரீ யத்தினை மாறச் சுத்திபோ லேநீ ரப்படியே
கானீ ருத்தடை யோர்பண மட்டதி நீசூர் ணத்தினிலே
பாரீர் மர்த்தன மீர்வா யுப்பலும் நீர்சூ சிக்கிராணி [ம்
போமே கப்பிடி மேல்கால் கைப்பிடி மேல்கா விற்றியிரு
வோமூ லத்துள சீழு வெட்டைகள் மீதோடித் திருகல்
வேரோ டற்றிடுங் காரீ யத்தினை யேதானுட் கொளவே.

**நாக பஸ்பம்.**

வேறு

சேராம் நவச்சார நீரினிற் சுத்திசெய்
சேரொரு பத்தினை யேயொரு கட்டியாய்
வீர மனோசிலை யோர்பல மேயெடு
நீரதிலே யறை மேலபி சேரினில்
உருவிய லுப்பினை யேபூசிக் கட்டிடு
மருவிக் கெசபுட மிடவது பற்பமாம்
ஓர்பண மீர்கால் திராட்சா திப்பொடி
வாரதில் நெய்மீதே னிதுகளில் நாட்டதங்-

கொளமேல் வீக்கங் குலைப்பு மேல்மூச்சு
அளநீர்க் கடுப்பு மரிப்பு மெரிப்புடன்
இளைப்பொடு சுவாச காசம் பீனிசம்
களைப்பொடு வீக்கம் பாண்டு தலைவலி
அஸ்தி சுரத்தொடு பித்த மயக்கமு
முற்றிடும் வெட்டைக ளண்ட பவுத்திரம்
உதிர வலியோ டாமைவலி மேல்வலி
அதிரு நெஞ்செரி ரத்தச் சயத்தொடு
முட்டுங் குடலேற்ற மூலத் தோடு
எட்டுவகை குன்மத் தோட ரோசிகம்
இடுப்பொடு கைகால் மேற்பிட ரிச்சிரங்
கடுப்பொடு கிராணிக் கழிச்ச விரைச்சலும்
உற்பனமா மிது வோடிடும் வாசுகி
பற்பமதைக் கொளப் பற்றறும் நோயே. (எ)

தாம்பிர பஸ்பம்.

வன்னியை யீச விறகது போலவே
உன்னி யடித்திண் டிலைபோ னறுக்கியே
தாம்பழ சாற்றினி னுண்மூன் றலம்பியே
வேம்புஞ் சிறுபூளை தழையீ ருளிநீர்
பற்பா சாண மதுபா டைமணஞ்
சரியீர் காசரை நாற்பல ரவிபில்
தடவி யுலர்த்தி முன்னிரு வகையும்
தடமது போற்பிடித் துள்ளிடு ரவியை
தெளிமண் சீலை யேழது செய்து
புளியம் பறணி யெருவோ டடுக்கிக்
கரிய புடமிட ரவியது நீறும்
வரைமரு விருந்தால் மாட்டு மிதரச
மரையது சங்க நீ நிற் புடமிட
நீறி விரியும் மதமுளி சாரணம்

தானடவே யங்குள்விட் டோர்பணவெல் லத்திட
வாந்திய தாகும் வரும்பித்த குன்மம்
சதைபடு குன்மம் தான்வலி குன்மம்
வதைசூலை சத்தி வெரிபிடி குன்மம்
வாத குன்மம் வகைபட்ட குன்மம்
சாதஞ் சுடுபாற் கஞ்சிய துட்கொள
பத்தியம் வாயு பதார்த்த மிகழ்ந்து
சத்தநா ளிதிலே தானறுங் குன்மம்
அட்டதி சூரணத் திட்டிடு தேனுடன்
வட்ட மிடும்பெரு வயிறும கோதரம்
குட்டஞ் சுரகுன் மம்படு குன்மம்
சேட்டுமக் குன்மந் திரட்சிசேர் குன்மம்
வாட்டுநற் பாரிச குன்மங் கபாலக்
குன்மச் சூலை கூர்மே கத்தொடு
குன்ம மூல வாயுவொடு குன்மம்
கெண்டை கவுசி நீராமை குன்மம்
தொண்டைவலி குன்ம முதிரக் குன்மம்
இப்படி வகைசே ரெண்ணெண் குன்மமுஞ்
சொற்படு சுரநோய் வாதநோய் வாயுவும்
சங்கத் திராவகந் தனிலே பணவிடை
அங்கத்திற் கூட்டி யிடவறு நோய்கள்
தீரா வயிற்று வலிமுதற் றீர்ந்திடும்
ஆராய்ந் தரிதாம் பிரநீ றிதற்கே. (எ)

## வெள்ளி பஸ்பம்.

துய்யா னதிலெட் டோன்றிடு மாரசம்
மெய்யாம் பாத ரசமொன்று சேர்த்தரை
சங்கத் திராவகத் தாலாட்டி வில்லைசெய்
அங்கத்திற் புடமூன் றலர்ந்துவெண் ணீறும்

அமளி கரண மடவது சுத்திசெய்
சிமிளி லடையோர் பணமிரு காலும்
அசுவகெந் தாதிச் சூரணத் தேயிட
பித்தம் பிரமை விருசிகா மாலை
சத்தசேர் வாயு தலைகிறு கிறுப்பு
கிராணி யுளைமாந் தைச்சுர மாந்தை
வெண்சலக் கழிச்ச லுள்ளெலும் புருக்கி
திண்படு மத்தி சுரம்பித்த வெட்டை
தீராப் பிரமைகள் தீர்ந்திடும் வெகுநோய்
ஆராய்ந் தறிபெரு நூல்வழி யேகொடு
அநுபா னங்களோ ராறுநா றிதற்குத்
தநுவே சிதநிற மாமறிந் துண்ண
ஆய்ந்திது சின்னா லாகையி னாலே
தேய்ந்திடப் பிரயோ கங்களைச் சொல்வதும்
உசிதம தாக வுரைத்திடப் பெரியோர்
ரசிதவெண் ணீறினை நாட்டுகின் றதுவே. (௩)

### அயச் சிந்தூரம்.

கொட்டிலாஞ் சல்லி யரப்பொடு சுத்திசெய்
விட்டரை சங்கநீர் வீரது மாள
அரப்பொடி யோர்பல மைங்காற் பிசறியே
பருதியி லுலர்ந்தபின் பாரொரு சட்டியில்
சாமமோர் நால்வறுத் தானது பற்ப
மாமே தயிரில் வைசெந் தூரப்படி
அனுபா னத்திட வப்படி நோயறும்
தனியே வியாதி சகத்திரம் வாங்கிடும்
வாழ்பதி யாமற வவுடத மாமிது
இரும்பது நீறிட வேவெகு தொழிலே. (௪)

### உருக்கு பஸ்பம்.

உருக்கறப் பொடிதூ துவலைச் சாற்றினிற்
சுருக்க மலம்பிட வேயது சுத்தியாம்
ஓர்தச மிப்பொடிக் கொன்றிட வேகொடு
வீரமும் வெள்ளையும் விட்டரை சங்கநீர்
அறப்பொடி யதனிற் பிசறிப் புடமிடத்
திறமுட னீயமரி காணங்கள் சுத்திசெய்
இட்டிட நெய்தே னதிசதா ரிப்பொடி
விட்டிட மும்பல் குந்தமே லேற்றமும்
வயிற்றி னுள்நோ யறுபதும் வாங்கும்
உயிர்ப்படு பற்பம தாக வுருக்கதே. (௰)

### வெண்கல பஸ்பம்.

வெண்கலந் தராபித் தலைமூன்றும் வெவ்வேறு
யங்கறப் பொடியது வாக்கிடு மாட்சியம்
வீரனு மெட்டொன்று விட்டரை சங்கநீர்
பாரிற் புடங்கள்செய் பற்பம தாய்விடும்
பெருநூல் வழியறு பான மறிந்திட
வருகும் பணவெடை யிட்டிடச் சிரநோய்
மண்டைநோய் கண்ணோய்ப் செவிநோய் வளர்பெரு
தொண்டைநோ யண்டநோ யும்ப லீறுநோய் [ந்
உதட்டில் வியாதி யுறுங்கன்ன நோய்களும்
மார்புதன நோயும் வயிறுறு மூலநோய்
கால்நோய்ப் படைநோய் கணத்தினிற் பாறுமே.

### வேறு முறை.

பொட்டலை யிந்துப்புச் சாரியெ வட்சாரி
ஒட்டும் படிகி பொரிக்காரங் கற்பூரம்
மட்டில்லாப் பொன்னம்பர் வார்த்தரை யண்டநீர்
சுட்டிதைப் பார்த்திடச் சுத்தத் தவளமாம்
தாம்பிர பற்பந் தன்னை ரிடைகூட்டித்

தாம்பிர வட்டத்தி சூரணந் தேனுகெய்
அத்தியி லிடவே யறுபத்து நால்வகைக்
குத்துமாக் குன்மங் குலைகுலைந் தோடுமே. (௰௨)

**ஊசர பஸ்பம்.**

ஊசர மெட்டிலொன் றாட்டிடு கற்சுன்னம்
காசா வமுரி கலக்கி யிறுத்ததை
காச்ச லவணம்போற் காணு மிதனிடை
ஊர்சீத வீரமும் பூரமுஞ் சூடனும்
விரியினின் வண்டும் வாய்நீர் மதிரவி
நிரமுட னரைலபி நீலம்ரவி காயவை
பற்பம தாய்விடும் பாரித் தெடுத்தடை
உற்பன மிவ்விடை யூட்டிடு பூரத்தை
அண்டநீ ராலே யரைத்ததை வில்லைசெய்
கண்ட சரிகினுள் கட்டி யெரித்திடு
இப்படி தொந்தநா லேற்றிடு பூரத்தை
வெப்ப மிதிற்று ளகம்வெள்ளை யாய்விடும்
துஞ்சுதி லோர்பணஞ் சூட்டிடு வெல்லத்திற்
பெரிய பசிதீ பனமும் பிறந்திடும்
அட்டகுன் மம்மறு மாங்கார வாய்வறும்
துட்டம் பிடிப்பறும் சூசிகா வாய்வறும்
பீனிசம் வாயு போம்நீ ரடைப்பறும்
மானிசம் நெஞ்சில் வசிரண மாறிடும்
வாயுக ளோடி மறுகி யொளித்திடும்
ஓயுங்கால் கைவலி உஷ்ணகோ பம்மறும்
கற்பூரந் தேனிற் காற்பணந் தின்றிட
உற்பன நீரடைப் புக்கல் லடைப்பும்
துன்மாங் கிசமதஞ் சூசிக்கி ராணிபோம்
வாயுவெண் பதுமறு மாவூ சரவுப்பு
ஆயும துசங்க நீரிலரைத் துண்ண

அஷ்டகுன்ம மெட்டு மறும்பித்த வாயுவும்
குஷ்டங் குடல்பிடிப் புக்குலைப் போடிடும்
சகத்தி லுளயா வயித்தியர் தான்பணி
அகஸ்திய மாதவ னாருரை பற்பமே. (௰௩)

**கெந்தக பஸ்பம்.**

சுத்தித்த கெந்தி திசம்பாளை யுப்பஞ்சு
கற்றாழம் பாலாலே காணரை யைஞ்சாமம்
ரவியி லுலர்த்தி நற்சீலை நால்சுற்றி
அமுதசஞ் சீவி சர்க்கரை மேற்கட்டி
சஞ்சீவிச் சாற்றினைத் தான்பாண் டத்திட்டு
இஞ்சிலை தான்வடி கட்டிம ருந்திட்டு
மூடியிற் சாமமெரித் தூப்பிட்டு வாங்கி
சாட வுலர்த்தித் தாதுக் கணிவித்தின்
றயிலத்தைப் பூசிட்டுத் தானதோ ரைந்துநாள்
புகையினிற் கட்டிப் போட்டிடு கல்வத்தில்
ஆங்கூர நீரி லரைத்தெடுத் தைஞ்சாமம்
பீங்கானிற் பூசிப் பிறைமுன்னே தூக்கிவை
நேரொரு பீங்கா னிடவுமன் னீர்விழும்
பாரந்த நீரைப் பருகியிற் காய்ந்திட
பற்பம தாகும் பணவெடை யுட்கொள
சொற்பனம் பேய்சுரந் துன்பமற் றோடிடும்
குஷ்டம் பதினெட்டுங் குறையா நோவுடன்
அஷ்ட குன்மங் கிராணியும் பீலிகை
கரப்பான் கிரந்தி கார்ப்புள்ள கன்னேசி
உரத்த தொடைவாழை யோங்கு குடைச்சலும்
பைத்தியஞ் க்ஷயம்பதி னெட்டுவிப் புருதியும்
சயித்திய காசந் தலைத்திபக் கம்பிடி
ஈளை யெலிகடி யெண்பது வாதமும்

கோழைசே ருடற்புண்கள் கொடிய வெரிச்சலும்
திமிருமே கவண்ட வாயுமெ லாமறும்
அமருஞ் சூலை யறும்பசி தீபன
முண்டாங்கல் வீரிய முற்பவித் தோடும்
அண்டர்போற் றேக மழியாமற் சித்தியாம்
கோமுனி செம்பொற் குறுமுனி முத்தமிழ்
பாமுனி மாமுனி சொற்கொந்த பற்பமே (௰௪)

### தங்க பஸ்பம்.

சுத்தித்த சூதஞ் சூட்டிபல மொன்றாய்
பத்துசேர் தங்கம் பலம திரண்டிடு
ரேக்கதாய் சூதத் திடுவரை தானரை
தாக்கு நறும்பூச் சாறது பொற்றலை
தன்னு லரைத்திடு சாற்றிடு வில்லையை
உன்னி ரவியி லுலர்த்திப் புடமிடு
இப்படித் தானே யிடவைம் பதுபுடம்
அப்படித் தங்க மலர்ந்துவெண் ணீறாம்
வெண்ணீ றதனையு மிஞ்சிதேன் வெல்லம்
கண்டிட னிஞ்சியில் திரிகடுகு திரிபலை
உரமிடு சீனியிற் கொள்ளநு பாநம்
திரமுட னறிந்து தின்றிடத் தீரும்
விதிபெறு சோகை காமாலை பாண்டு
பதினெட்டு குறைநோ யிரத்த க்ஷயஞ்சல
முற்ற க்ஷயத்தொடு பித்தக்ஷயங் குடர்கரம்
சற்றேடு குலைத்தல் க்ஷயமெரி குன்மம்
வலித்திடு மேகஞ் க்ஷயங்கிரா ணிச்சயம்
அரிசய மண்டை யழல்க்ஷய மூலம்
தெரிக்ஷய மரிகுா விழிக்ஷயஞ் சூலை
வாத க்ஷயத்தொடு மாசேட் டுமக்ஷயம்

விப்புரு திச்சயம் மேவிளைப் புச்சயம்
உற்பன க்ஷயமீ ரொன்பதும் வாங்கும்
மூல வீக்கம் முளைவீக்கம் பெருவீக்கம்
காலின் வீக்கங் காணரி பாண்டும்
வகைபெறு மகோதர முழலைநீ ராமை
தொகைபடு க்ஷயத்திற் றோன்றிடும் வியாதிகள்
நீரிழி வும்பெரு சலமல மிழிவுகள்
பார்நீ ரிவ்வகை தானறு மிதனைத்
தின்றிடத் தேகஞ் சித்திய தாகும்
போகம் பெருகும் பூரணி கலைசேர்
அங்கங் குறைநோ யறுமண் டலத்திற்
றங்கஞ்செய் பற்பஞ் சாதித் திடினே. (யரு)

**முறை.**

பறங்கிதா ளகமு மிலிங்கம் வெள்ளை
பவளமா சிலைசேர் கெந்தியும் கிரங்களுஞ்
சாமுவெண் கருப்பனை விட்டு மூன்றுநா
ளாட்டிடு வில்லை செய்தழ லுலர்த்தி
அண்ட மதிலே யெரிக்கவது வெள்ளையாம்
சொல்லிலோர் பணநேர்வா ளமதிரு ரணத்திட
வெண்சுரந் தோஷ சன்னிகுறை நோயும்
குட்டமொடு லைசூ விரிசனிட மாவிடம்
ஆட னந்தவிழ் மெலியுடன் கடிகடு
வண்டுகடி புழுகடி புடையுநற் கடிக
ளுன்னி யட்டை கடிபுரி யும்பல
விஷமதோ டிடும்படை கொளற்ப மதிலொடு
நோய்களொரு பத்து நூறுமெய் பாறுமே. (யசு)

**நவரத்ன பஸ்பம்.**

சொற்கன காத்தின் நவத்திலொரு காசிடை
அற்கவடி பாலிதனை விட்டரை யுலர்த்திடு

மிக்கபுட மிட்டிட வெழுத்தூரிய நீரதால்
விட்டதனில் வைத்தரச பற்பமதி லோரிடை
வற்கநறு நெய்துளி மதுத்துளி தனித்திட
மருட்பிரமை விக்கல்பொரு மல்விரும லோடிடும்
துக்கவிஷ மற்றிடு சுரத்தொடு கனத்தநோய்
அற்றுவிடு மித்தனைகள் பற்பநவ ரத்நமே. (௰எ)

## இலவண பஸ்பம்.

### வேறு.

இந்துப் புப்பல மொன்றிடு கல்லுப்
பேபொன் றரையாகும்
பந்தா மத்தைக் கள்ளிப்பால் மேனியரக்
கம்பால் நாலாகும்
தந்தனை விட்டரை வெவ்வேறு வில்லைசெய்
தானே புடமாக
தொந்தனை நீறிது காயத்திடவே
குன்மம தோடிவிடும்
எந்தவ கைக்குள வாயுக ளோடிடு
மிதுவே சத்தியமாய்
ஐந்தெனு முப்பதி லிப்படி யேயரை
பற்பம தாய்விடுமே. (௰அ)

## தாளக பஸ்பம்.

தாளகத் தினையே தசத்தொரு தாசுழி
திறப்பிடி யேகிளிபோல்
மாகற் சுன்னத்தி னுள்ளே பதிச்சிறு
நீரினை விட்டதிலே
எடுத்திடு தானொரு பத்தசமே விடத்தொட
மேயொரு பத்தசமே

பூரச் சுன்னமா வீரமத்திடை
மேயயரைத் தகைமே லப்பிக்கட்டி யிலே
உலர்த் திதைமே புளிபப்பாணி
எரித்தநீர் தானதுள் வைத்ததையே
எரித்திட வேகடி பதத்திலே
மதிக்கடு நீறது வுற்றெடுமே
அடைத்ததை யோர்பண மிட்டிடவே
எலிக்கடி மாவடு துர்ப்பெருநோ
யடைத்திடு மாவலி யுற்றுதிர்வாய்
வலிப்பொடு மீளை க்ஷபப்பிறமே
கடைப்பொடு நாலிரு குட்டமுநேர்
கறப்பனொ டேமுசல் தாலகனே
வலிப்பொடு மாவலி யற்றறுமே
குலைப்பொடு தீட்டம வைப்படுவன்
ரணத்தொடு நோய்வகை திடக்கறுமே
சகத்திய வாய்வறுஞ் சத்தியமே. (௰௯)

**வெள்ளைப்பாஷாண முதலான பஸ்பங்கள்.**

அரிதார வெள்ளையது செய்தவகை போலவே
அருநெல்லிப் பாஷாணமும்
பெரிதான நிமிளையுஞ் சிலைலிங்கம் வீரிகார்
முகினவி யுடனேழுமே
கொடிதான தவளமிது வாகுநற் பெருநூல்
குறித்தவனு பானமீதே
வடிவான வகையறிந் திடலட்ச நோயறும்
மாசித்தி மாதவர்சொலே. (௨௰)

அப்பிரக பஸ்பம்.

அப்பிரேக நவநீத மாகச் செய்து
அரக்கம்பால் வாழைபிட கிழங்குச் சாறு

முப்பதரைப் பாளை யண்ட நீராலாட்டி
மூவாறு தரமூர முற்றும் பிரச்
சுன்னமதி லெட்டிலொன்று கூட்டி யூதச்
சுன்னமதா மிப்படியே காந்தச் சுன்னம்
அன்னமுழி கரணங்க ளிதனைச் செய்து
அப்பிரேகச் சுன்னமதற் கனுபா னந்தான்
வங்கபற்பத் தோடமுத சர்க்கரைதேன் வெண்
வைத்தருந்த மேகமறும் வாங்கு நீரும் [ணெய்
அங்கசுர மூலவெட்டை கபால வெட்டை
அடைப்புவலி நோய்களெல்லா மறுக்குங் காந்த
பற்பமிடத் தீபனமா மநுபா னத்திற்
பார்த்தருந்த வாறுவகைக் கிராணி தீரும்
சொஸ்தமுடன் வாயுவறுங் குன்ம மோடுஞ்
சுத்தவித்தை யிரண்டுவிதந் தொழில்கா ணீரே. ()

### சவுக்காரச் சுன்னம்.

பூக்கல்லுச் சுன்ன மமரியுப் பெண்ணெயும்
மேற்படு மெட்டிரண் டொரட் டொன்றரை
கலக்கி யிறுத்திதைக் காய்ச்சாக் கடைந்திடு
நிலைப்படு மேறுரை நீட்டித் திரட்டிடு
கற்பித மாகக் காய்கையிற் கற்சுன்னத்
தற்பன மிட்டு முருட்ட விறுகிடும்
லகுவாய்த் தசமஞ்சு கற்சுன் னத்துள்
வெகுவா யறுநீறை விட்டதி னீற்றிடு
பின்பு ரவியிற் பேசா துலர்த்திவை
மிஞ்சி வெடியுப்பு நீறிறப் படிகிவை
ஆட்டி ரவியிற் புடமிடச் சுன்னமாங்
கூட்டியிச் சுன்னங் குறையா திருபலம்
உள்ளத்தி ஞலிடை யூட்டிடு சாரத்தை
இறங்குஞ் செயநீ ரேழுதரம் பனியில்வை

உறங்குஞ் சவுக்கினங் தோயரவி தன்னிலே
கிளிக்கட்டித் தூக்க வடிந்தற் றெண்ணெய்போ
வெண்கத்தம் போல வெண்மையா குஞ்சவுக் [ம்
காரங் கண்டுமேல் கவசிக்கச் சுன்னங்கள்
கடற்பூ படுகிவெண் கண்டரி னங்களும்
தடப்படு பூநீர் சயநவச் சாரமேழ்
வெடியுப்பு நீரினை விட்டே யரைத்திடு
கொடிய புடத்திற் கொடுஞ்சுன்ன மாய்விடும்.
சுன்னஞ்சம் பீரா சத்தினி லாட்டியே
முன்போய் வழலைக்குக் கட்டி கவசித்
துலர்த்தியோ ரேழ்நா ளூட்டிடண் டச்சலம்

அண்டஜெயநீர்.

பிலத்தவகை நீர்கேள் பொன்பத்தொன் றண்டம்
வெண்கருப் பீங்கா னதில்விட் டரக்கப்பால்
திண்படு சேரச் செலுத்திக் கலக்கியே
சுண்ண நீரி லரைத்தூத நீறிடும்
ஒருபலஞ் சுன்னத் தெளிவிலே கரைத்து
இறுத்த நீருடன் காரமு ரம்பூரம்
நரைத்த குருவண்டு நாபியுஞ் சூடன்
சீனம் புழுகுதிர் வீரமுங் குக்கிடத்
தானவெண் மலமுங் தனித்தபதி னொன்றும்
அண்டசுண் ணம்புத் தெளிவி லரைத்ததை
கொண்டொரு சேரைநீர் கூட்டிக் கலக்கிமுன்
கடைந்தந்தக் கருவினி லூற்றிக் கலக்கியே
கடைநேகக் கவறினால் காணவந்த வெண்ணெயை
வாங்கியோர் பீங்கான் வைத்துமுன் னுள்மூட
ஓங்கிக் கருத்தா னுருகி சலமாகும்
இச்சலங் தன்னி லெடுத்த சரக்குக்கு
பட்சமாய் வார்க்கப் படுமுன்னே பற்பமாம்.

கவசித்த முன்சவுக் காரத்தை யின்னீரிற்
றுவைசத நாளிற் றுடியாங் கொடுஞ்சுன்னம்
இச்சுன்னஞ் சார மெடைவீரங் கூட்டியே
வைச்ச மெழுகினை மாட்டிடு கல்லுப்பில்
பூநீ ருள்ளே புடமிடக் கட்டும்
பூநீர் வழலையும் பூரமும் வீரமும்
கூட்டிக் கருவிற் குழைத்தவவ் வுப்பினில்
ஆட்டித் தடவி யதைவாட்டி யூதிட
மணியாய்க் கடுஞ்சுன்ன மாய்விடும் பூரத்தின்
மணியவ் விடையிட்டு மாட்டி யரைத்திடு
வில்லைசெய் காய வுலர்த்திச் சருகினில்
எல்லைய துள்ளிட் டெரிக்கக் கடுஞ்சுன்னம்
இவ்வகைப் பத்தச மேற்றிடு பூரத்தை
கவ்விய பூரங் கடுஞ்சுன்ன மாய்விடும்
இச்சுன்னங் காசிடை வீறியோர் காசிடை
வைச்சிடு மாவிட மாட்டு கருவினால்
வில்லைசெய் தப்படி தீயெரி சுன்னமாம்
பல்லையிற் றாளக மேற்றுநூ றுதொந்தம்
வெண்ணீற தாகுமோர் காசிடை வீரம்
புண்ணிய வங்கம் பொதிந்து புடமிட
சுன்னம தாகுந் துடிவீர மவ்விடை
அன்னீர்க் கருவா லரைத்து நிமிளைமேல்
அப்பியே ஊத அலர்ந்தது சுன்னமாம்
செப்பிய சுன்னத் திடைவீரஞ் சேர்த்திட்டுச்
சாரம தோர்பலந் தப்பவகை யண்ட
நீரிற் படிகிவெடி நீரிலோர் காசெடை
இட்டு நவச்சார மேழுநாள் தோய்த்துமுன்
இட்ட நிமிளை இதன்மே லபித்திடு
மணையினுள் வைத்து மாட்டிப் புடமிடு

குணமுள சுன்னக் குகையி லதைவைத்து
லகுவில் மணம்புடம் நாட்ட நவசாரித்
தொகைநிர் மலம்போற் சூழ்குகையு ணிற்கும்
இச்சுன்ன மெட்ட தாக் கொன்று சவுக்காரம்
அச்சுன்ன மண்டநீ ராட்டிடு வில்லை செய்
ஓதும் ரவியிற்கா யுள்வைசுன் னக்குகை
ஊதத் தவளநீ றேங்கிடுஞ் சாரந்தான்
காசிடை காரக் கடுஞ்சுன்னத் தவ்விடை
மாசிய வீர மத்திப்ப தண்டநீர்
பத்து வராகன் சாரங்க பாணிமேல்
உற்றிதைப் பூசி யுலர ரவியில்வை
சுன்னக் குகையிற் றுடிபெற வூதினல்
சுன்னம தாகுந் துடர்வீர மவ்விடை
வகைக்கரை காசிடை மாட்டுப் பரிக்காசில்
திகைத்த ரவியிற் றிரமா யுலர்ந்தபின்
மாட்சீக நீறிடை வீரமத் தித்து
ஆச்சிமுன் தங்கத்தி லப்பி ரவியில்வை
காய்ந்த வெள்வங்கக் கடுஞ்சுன்ன மோரிடை
ஆய்ந்தநற் றுளக மாகும் வழலையும்
மத்திப்ப ரங்கி மாட்டிடு மேவாரிடை
அத்திச வண்டநீ ராட்டிக் கவசித்து
அண்டநீர் கீழ்மேல் மத்திக் குகையிட்டு
முண்டபுத் தோட்டால் மூடியேழ் மண்செய்து
கஜபுட மிட்டு ஆறி யெடுக்கையில்
கஜமுக முடைய கணேசன் வைரவன்
ஆசைமா தேவி யான்மா லிவர்கட்குப்
பூசைசெய் தேயெடு பொற்கடுஞ் சுன்னமாம்.

வாதமுறை.

சுத்தித்த சூதஞ் சூட்டிப லம்பத்து
மத்திக்கச் சொன்ன மகாநீர் பலமொன்று

அண்டநீ ராலே யரைத்திடு நாற்சாமம்
உண்டைய தாக வுருண்டு மணியதாம்
ஊமத்தங் காயி லுருகப் புடம்பத்து
மாமத்தி யாரையில் மாட்டுபு டம்பத்து
முக்குருந் துள்ளே மூட்டு புடம்பத்து
காண்டியில் வைத்துகா ரெண்ணெய்மேற் குத்தி
உருண்ட மணியை யுருக்கச் சயமதாம்
ஆகும் நெகிழ பந்தத்தி னுள்வைத்து
ஏகு மிப்புட மெட்டதிற் கட்டுணும்
கரியி லுருக்கிடக் கனலிட்டுத் தங்கம்போ
லுருகி யசையு மிதிற்கூட்ட வேவகை
சார மொன்றரை பரியினைச் சுத்தித்த
சோரம தொன்று கூட்டி யுருக்கிட்டு
மணிபோல் வாங்கி மகத்தான வெண்கண்டர்
தணிகொள்மாட் சீகஞ் சவ்வீரந் தாளகம்
கார வழலை கடுஞ்சாரி கல்லுப்பு
பூரமோ டேழும் புகழ்சுன்ன மோரிடை
அச்சுன்ன மண்டநீ ராட்டி யரைத்திடு
உச்சித மாக வுருக்கிநீ நாகத்தில்
கூட்டும் பரிமணி கூட்டிக் கவசித்து
போட்டண நீரிடைப் புடத்தில் மகாசுன்னம்
இச்சுன்னந் தன்னை யெடுத்து ரவிமதி
வைச்சதில் நூற்றொன்று மாறுப் பசும்பொன்னும்
மாற்றது ஏழு மருவிப் பிறந்திடும்
பார்த்திதைக் காற்பணம் பாலிற் பருகிட
காயமுஞ் சித்தி கனரோக நாசமாம்
ஆயும் பெருநா ளளியது பானத்திற்
கொண்டிட லட்சநோய் குடிவிட் டோடிடும்
பண்டி யநுபானம் பார்த்திதை மேற்சொல

செய்யுள் சகத்திற் சின்னூல தாய்விடும்
ஐயம தாகையி னலிச்சின் னூலிற்
சுருக்கி மகத்தாந் துறைசேர் வகாரத்தைச்
சுருக்கி வகையே சூத்திரத் துட்சொல
ஆதியு மந்தமு மில்லா திறைமொழி
யோதுங் கிரந்தத் தொருலட்சஞ் சூத்திர
மிம்முறை யாதலி னலை யிசைபெற
அம்முறை சூத்திர மாக வறைகுவ
கோமுனி தென்கயி லாய னகத்திய
மாமுனி தன்சொல் வகாரவைத் தியமே (உ௩)

உருக்கிடும் போது மூவகை யீயமாம்
திருக்குள வகைப்பற்பஞ் செய்திடி லம்முறை
தப்பிடிற் பாத ரசம்பத்தி லொன்றிடு
வேப்பண்ட நீரினை விட்டரை காசுபோல்
வில்லை பிடித்து வெயிலி லுலர்ந்தபின்
எல்லாம் புடமிட் டெடுக்க மகாபற்பம்
எடுத்து வகையறு பானங் களிலிட்டுக்
கொடுக்க வெகுநோய் குலைகுலைந் தோடுமே.(உ௪)

வேறு.

காரசா ரத்தினுள் நேரதா துப்பினுட
 னேறிநீர் தப்பிலதுவும்
சாரநீ ரத்திலிட நீறதே யெட்டிலது
 தானுநேர் முட்டையறவே
பாரமசி சுத்தாவி காயிலோ டத்திலிடு
 வாகுசே ருற்றபுடவெண்
ணீறதா மத்தெடுமெய் நோயதே யற்றுவிடும்
 வாரசுரா முற்றவகையே. (உ௫)

## சிந்தாமணி பஸ்பம்.

லோகம் பதினொன்று நூற்பத்து பாதாசம்
மூகநற் பாஷாண முப்பத்தி ரண்டுக்கும்
மூலங் கார்காரி யுப்பிரு பத்தைந்து
மூலிகைச் சத்தா யிரத்தெட்டு மிவ்வகை
சுன்னம தாகமுன் சொன்னபொற் சுன்னம்
மன்னும் புழுகுடன் மத்தித்துப் பூசியே
ஊதச் சகலமு மொடுங்கித் தவளமாம்
பேதவிர் லட்சம் பெருநூல் வழியாக
அநுபான மங்கங் கறிந்து கொடுத்திடத்
தனியே வியாதி சகலமு மோடிடும்
இவ்வகை பற்ப மெலாஞ்சரிக் கூட்டி
அவ்வெடை சூத மதினறும் பூசிலை
மாலிடங் கூட்டி மறத்திகு றத்திநீர்
ஆவிடக் குப்பிக் கமர்த்தி யெரித்திடு
இந்துவு நாண்மூன் றெரித்திட மகாபற்பம்
சிந்தா மணியிது சேரு மெடுத்திதை
நாலா யிரத்துநா னூறுட னுற்பத்தெண்
ஆலாம் வியாதிக் கநுபா னத்தினில்
ஈந்திட நோய்களெழு பத்துமூன்றி லட்சம்
மாய்ந்திடும் பற்ப வகையிது முற்றுமே. (உகூ)

## ரசகற்பூர-பஸ்பம்.

தீநீரிற் சுத்தி செய்துசெஞ் சிலையோ
டுப்பிடுங் கட்டெரி ணிபத்திடும் வழித்திடு
வரைகளைக் கடமதி லடைத்தெரி யீரைந்து
கடிக்குளி லெடுத்திடி லரைப்பண மிரண்டெனக்
கிரந்திசிரங் கறுமீரெண் சூலைவா தங்கமும்
சுரமுறு பிடிப்புட னெரிப்பொடரி மேகங்கள்
போந்தனி முதன்முடி வாய்ஞா னக்கனி
பொதிமுனி யருளிய சற்பூ ரம்மே. (உஎ)

## வாலரசபதங்கம்.

லிங்கத்திற் பாத ரசமெடுத் துசங்கநீ
ரங்கத்தில் விட்டங் கரியி லுலர்ந்தபின்
வளையினிற் கடமதில் வைத்திட் டுவாலுகை
உளியிட் டெழுபது கடிதெரி தீயெரி
ஏந்திரந் தன்னை யெடுக்கப் பலகைமேற்
பாங்கரி தாகப் பழுத்தே நிற்கும்
வச்சிரம் போல வடிவாம் பலகையை
உச்சித மாக வுளியிட வெகுநோய்
அறுமிது சத்திய மாம்பெரு நூல்வழி
திறமநு பாநத் திரமறி வோர்க்கே. (உரு)

## வீரபதங்கம்.

வீர ரசத்தினில் விட்டரை சங்கநீர்
ஊர்வளை கடமதி லுள்ளடைத் தேயெரி
தங்கச் சிலாகைகள் தாமது போலவே
அங்கதி லேறுங் கடிகை யறுபதில்
அநுபா னத்திற் காற்பண மருந்தத்
தநுவுள வெகுரண மாறுத புண்ரணம்
தீராத குட்டமுந் தீர்ந்திடு மிதனால்
கற்பூ ரத்துறை கைம்முறை யாக
உற்பன மாயறிந் தூட்டப் பலித்திடும்
கைம்முறை யாற்கச டற்ற வவர்க்கெலாம்
மெய்வகை பொய்யா ரசத்தொழில் விதங்கள்
அவ்வகைக் குருவி னிடமதை யறிந்து
செவ்வகை நூல்வழி செய்யப் பலித்திடும்
இங்கு வகைரச போகம் பலித்திடத்
தங்கம் விளையுந் தான்சத் தியமே. (உசு)

### சவ்வீரக்கோடாசூரி.

சண்ட ரசத்தினைப் பாத ரசஞ்செய்து
கொண்டு பலமண்ட நீறது மோர்பலம்
கூட்டி ரவியிற் குழுற வுலர்ந்தபின்
காட்டி வறுத்தகல் லுப்புபல மிரண்டுமாய்
ஒருத்த பலமிரண் டேட்டு படிகையை
ஈர்பலஞ் சாரி யீரிரு பலந்தான்
போக வடுதான் போட்டிடு முப்பலம்
எல்லாம் பொடித்து இடுவரை குப்பியுள்
சொல்லா மணற்றாள் சூட்டிவை வாலுகை
முத்திடு முப்பது நாழிகை மூட்டிடு
பத்திடுந் தேங்காய்போற் றூனே பதங்கமும்
இதனை யெடுத்துடைத் தேபார்க்கச் சவ்வீர
மிதனையோ ரைந்திர மேற்றக்கோ டாசூரி
கோரமதான கொடியகோ டாசூரி
வீரம் விளம்புது மேதினி யோர்கட்கு
இந்திரர் வானவ ரேற்றிடு பூரணச்
சந்திரோ தயமா முனிசொற்சவ் வீரமே. (௩௰)

### ஏலாதி மாத்திரை.

மாத்திரை வகைசொல்வேன் மாணுக் கருக்கு
ஏற்றிய வேல மிலவங்கங் கோஷ்டம்
கெருடப் பச்சை கோரோசனை மதுரமும்
அருளு மலர்க்காச் சந்தனங் கல்மதம்
விற்கல்நார் சாஸ்திர பேதி விலாமிச்சம்
மற்புண்ட ரீக வளையங் கிராம்புடன்
மல்லிசெங் கழுநீர் கிழங்குமுத் தக்காசு
மெல்லியாம் பச்சைப் புழுகொடு வெட்டிவேர்
பேரீச் சம்பழம் ரோகணி திப்பிலி

பார்நெல்லி கச்சோல மடவிகச் சோலமுந்
தந்திரக் கூகைநீர் சன்ன லவங்கமும்
முந்திரி கைப்பழ மூட்டிடு கல்வத்தில்
மாதளர் பழச்சாறு வார்த்தரைத் திட்டுச்
சீத விளநீர் செங்கன்னல் பன்னீருந்
திடமுட னல்வகைச் சாற்றி லரைத்திடு
கடலைப் பிரமாணங் கண்டிதே யுண்டைசெய்
நிழலி னுலர்த்தி இட்டுமுலைப் பாலில்
இளநீர் தன்னி லிடம்கா வெட்டைகள்
கையெரி வுள்ளெரி காலெரி கண்ணெரி
மெய்யே றுஷ்ண கோபமுந் நூறும்
நாற்பது பித்தம் நடுங்கி யொழிந்திடும்
மேற்படு மப்பிரகச் செந்தூரத் திட்டிடக்
கூறிய கோடி சுரவங்க வெப்புகள்
நீறிய மேகம் நீரிழி வுட்புண்கள்
பித்தத் தெழுந்தநோய் போரான காந்தல்கள்
அத்தரு முண்டை யருளுமே லாதிக்கே.     (௬௧)

### விரோசனவாதராக்ஷச குளிகை.

விரோசன மாமணி மேலாய் விளம்புதும்
வரிகடுகு ரோகணி வல்லிவளங் கம்வாளம்
அஞ்சையுங் கல்வத் தாட்டிப் பொடித்திட்டு
இஞ்சிநீர் தன்சாறுற் றேவிட் டரைத்திடு
பருத்தி விரையள வுண்டைதான் செய்திட்டு
எரித்த மிளகுநீ ரிஞ்சி நீரிற்கொடு
வாய்வெண் படுமறு மாட்டக்குன் மம்போ
மாயுஞ் சுரமறு மாகும் விரோசனம்
கோவே சுகபேதி கொடிய விரோசன
மாவாய் ராட்சதன் மணிகை மருந்தென்னே.

## சண்டமாருதசன்னி நாதவைரவன்.

சண்டமா ருதச்சன்னி நாத வைரவன்
உண்டை யதனை யுரைத்திட மாவிடம்
வெள்ளை மடையணி யிரண்டரை யிரண்டிடு
மெள்ளக்கு மரிச்சாறு விட்டரைத் துப்புட
மிட்டுக்கு மரிச்சாறு விட்டரைத் துண்டைசெய்
பட்டை முருங்கைச்சா றிட்டிடச் சன்னிபோம்
வாத சுரமறு மாட்டு இஞ்சிநீர்
தோஷ சுரமறுந் தோடுந் தூர்க்காற்றே. (௩௨)

## கபாட மாத்திரை.

ஆதிக்கிராணி யதிசார பந்தனம்
சாதிக்காய் மேற்பத்திரி காய நற்சீரி
விடையங் கிராம்பு அபினியும் வெந்தயம்
கடைவன்னி கெற்பங் கழற்சிப் பருப்பொடு
குராசானி யோமங் கூட்டிச் சமன்கொண்டு
ஆனந்த மூலிச்சா றடைவரைத் துண்டைசெய்
மேனு மிலந்தையின் விரைப்பிர மாணம்
நிழலி லுலர்த்தி மதுவிலிடு மூன்றுநாள்
முதலிடு மேதித் தயிரிடு மூன்று நாள்
தாக்கக் கழிச்ச லானுற் றணிவாம்
பூந்தர்து நற்கனி நீர்தனி லிடவே
இரத்தக் கடுப்பு மூலத்துட் கடுப்பு
இரத்தஞ் சீக்கிரா ணிசலக் கிராணி
சங்கிரக கிராணி சலமலந் திக் கிராணி
தொங்குவா யுக்கிராணி சோராக் கருக்கிராணி
திறமுடன் கிராணிக் கபாடம துண்மையே. (௩௩)

## இராக்ஷச குடோரி மாத்திரை.

பஞ்ச லவணநீர் காள கண்டரச
பற்பமப் பிரகம் பற்பநேர்பரிய

வாளமொடு கனிகள் மூன்றுதிரி கடுவும்
நாபி நறும்புமா பந்தவர்க்க மாராட்சதக்
கொடிய பால்களண் டநீரி லாட்டிடு
பரியவுண் டைசெய்து நிழலில்வைத் துலரப்
பான முற்றவனு பானமே கொண்டிடப்
பெரியவா தமெண்ப தொடுகொடி யசூலை
கோட்டுவா யுடன்கோல ராட்சதக் குடோரி
வாயுவறு வாத ராக்ஷத குடோரியே. (௩௪)

### அக்கினி குமாரன்.

இனிகொடு பஞ்சலோ கபற்ப முடனே
தனிசிலை கெந்தி வாளமுற்ற பொரிகன்
இருசிகொள் சித்திர மூலஞ் சுகவடி
நீரதி லரைநித்தம் நாளோர்வைத் துலர
மணிதனை யிட்டபோ தறுபத்து நாலு
சுரமது விட்ட தோஷித் துகள்போம்
மனகல்போ லுற்றவா யுவரிய நோயது
வேரறு பத்து நூற தகலுமே
மணியதக் கினிகுமா ரன்வகை வைப்பிதே. (௩௫)

### சூயம் அக்கினி

துருசுதுத் தரிதார மும்வீர மோடுநால்
வகையே பெற்றிடு லோகமு நாதமு
நீரதில் விட்டரை கொடுவே லியினீர்
ரவிவைத் திடவே யனலே புகையு
மதைதயிட் டிடவே கொடுநோய் களறும்
சுயமக் கினிமா தவனு ருரையே. (௩௬)

### இரசபூபதி.

இனியினீரு லோகநீரு இருசிமாள தாரநீர்
கனிகனுபி கடுமுவேலங் கடுவொடேகை யானிநீ

ரமுதநீரொ டிஞ்சிநீரி லரைபொர்சாம மாகவே
சிறியபயறு ளவதாக பருதிமதியி லுலரவே
இடவுநூறு சுரமதோட வரிகண்வாத பிடியொடே
கொடியசூலை யதுவுமோடு மிரதபூ பதியிலே. ()

சுரமாத்திரை.

நாபி சூத கெந்தக முக்கடு
தேவி வாள மிடங்கண மொக்கிடு
நூறு சீரக முப்பலம் வைத்திடு நல்லொடு
சாவிபோக் கிவெண் காக்கண விரையே
தானி தேசம ஞெக்க நிறுத்திடு
சரகமீ ருகரிப் பானீர் விட்டரை ஒருசாம
மேவி யேயமு குண்டை யுருட்டிடு
வேன லோர்நிழல் வைத்து உலர்த்திடு
வேணு மேநல இஞ்சிநீ ரிற்கொடு
மாலை நோவில்வரு துன்பந் தீருமே
சூலை யென்றது ஒன்பது நூற்சுர
மறுபத்து நால தாய விளைகெடும்
பாவையே சொல்லிடத் திடுக்கிட் டொழித்திடும்
பார வாந்திநஞ் சுகக்கல் நடுக்*லும்
பாரமே யுறு மற்புத மான்மகா
தேவ ருயகி யும்பன் பொற்பத
நாவி லேதுதி யர்ச்சனை நிற்றலும்
சேவித் தபிஷே கங்கொடுத் திடுசெயம்.

இலகு ஏலாதி.

இலவங்கப் பட்டைநற் சீரி யதிமதுரம்
ஏலங்கோ ரோசனை யிவைசரி கூட்டி
குலமங்கை கொங்கை யமுதத்தி லரைத்து
குன்றியள வுண்டைகொள் வெட்டைய தோடும்

சலமேக மதுவோடு மப்பிரகச் செந்தூரத்
தோடு மதுலகு வேலா தியிதே.

### சுராராமபாணம்.

சுத்தித செய்வன்னி கெர்ப்பம திரண்டு
சுகசுத்தி யெலிகொல்லி மூன்றுமா மருளும்
முத்த நீர்தனின் மூன்றுநா ளரைத்து
மணிசிறிய பயறளவு அமுதம திடவே
சர்க்கரையி லிட்டிட வெதுப்புச்சுர மாறும்
தனிப்பாலி லேகஞ்சி பத்தியமு மாகும்
உற்றதொழில் சுரராம பாணமிது வாகும்
உண்டையது பழகிபிட வோடும்வெகு சுரமே. ()

### துன்மாராக்ஷத மாத்திரை.

போட்டி ரவி வெள்ளைசங்கு குடிரசம்நா பியைந்து
இடுபழநீர் தங்குவரை யொரோரோடுகொண்டு[ம்
இடுபுட மாதிசே வலதையெடு சிங்கபாண
மதிவரை கண்டுநா ளேலதி யுண்டை
தலையடை யிஞ்சியுள் ளிரசமதி னுண்டையொன்
றிடவரு மஷ்டகுன்ம மடிபடு முட்டல்தானு
முச்சித குடோரகுன்ம ராக்ஷத னுண்டைதானே.

### சந்திரோதயமணி.

மூன்று பொரிதிரி கடுபிலி திரிமடை
ஈன்ற வகைக்கோர் விராகன் கலைப்பாலில்
காட்டி யரைத்துக் கவுசி சிவப்பின்மே
லூட்டி ரவியி லுலரப்பின் னுப்புப்
பொதியை மாட்டியப் புத்துமண் ணரைத்தும்
பொதிமீட்டு ரவியில் வெவ்வே றுலர்த்திடு
உலர்ந்தபின் னுழி மணற்குள்வை யெட்டெரு

அடர்ந்தே புடமிப் படியது மூன்றிடு
தாமதச் சிவப்புக் கவசமதை வாங்கிக்
கோமயத் தாலே யலம்பிக் கொடும்பொரி
மூன்றுவ ராகன் பொரித்ததிற் கூட்டியே
தேன்ற முத்தத்தரை செய்திடு வில்லைபோல்
பருதியி லுலர்ந்தாற் பாரசந்தி ரோதயம்
சொருவாய் இரதஞ் சன்னி சலபேதி
குன்ம மதற்குக் கொடுத்திடு சுக்குநீர்
வர்மம் பணவெடை மரட்டிடிஞ் சிச்சாறு
சத்திகுன் மம்பிற விச்சுத்த விர்த்தி
மத்திய சந்திரோ தயமணி மாட்டிடே. (சக)

### ஆனந்தவைரவம்.

அண்டமகிழ் சன்னி யானந்த வைரவன்
உண்டை யதனை யுரைக்கப் பொரிநாற்றம்
சிவப்பு இருசியும் திப்பிலி யைந்தும்
முவப்புமே ஷப்பால் அதிலரை முச்சாமம்
கொடிவேலி கஷாயநீ ரதிலரை முச்சாமம்
முடிகொள் ளமுதநீர் முதலரை முச்சாமம்
மலைகுன்றி போலுண்டை வைத்து உலர்த்திடு
முப்பாலிஞ் சிச்சாறு மூட்டுவோர்க் கொள்கநீர்
கடுவுள்ளி நீர்முருங் கைப்பட்டை நீரினில்
இடப்பதி னெண்தோஷம் போமது பாகம்
முன்னதி விட்டிட வாத சுரமறும்
மானே திரிதோஷ சன்னிபோ குந்தச
மெட்டுவிதச் சன்னி யேங்கி யொழிந்திடும்
அஷ்ட வைரவ சன்னியானந்தமே. (சஉ)

### கோடாசூரி.

வேர்கொம்பு திப்பிலி மிளகிஞ் டிந்துப்பு
தேர்கடுகு ரோகணி சிவதையோ டேழுக்கும்

பார்சரி வாழைப் பழச்சாறு விட்டரை
குரமணி வெந்நீர் கொடுக்க விரேசனம்
மிகுத்த விரேசன மானுல்பாற் கஞ்சி
தொகுத்த மலக்கட்டுச் சுரங்குளிர் சூலைபோம்
வாயுக் கிரணம் பிடிமந்தம் போய்விடும்
மாகோடா சூரி மணிகை மருந்தே.

பால சஞ்சீவி.

இலக்குமி நாபி ரசமும் பொரிவெள்ளை
மக்குச் சிவப்புக் கடுமேல் வெண்முள்ளு
சம்பீரச் சார்விட்டுத் தானரைத் துண்டைசெய்
தும்பெரு வாத சுரத்துக்கு நொச்சிச்சார்
ஏகிய பித்தச் சுரத்துக் கிஞ்சிச்சார்
தேக முலைப்பால் சிலேத்ம சுரத்துக்கு
ஆலமா டாதோடைச் சாற்றி விடவரு
பாலசஞ் சீவி மகத்தாங் குளிகையே.

மகா குடோரி.

எலிப்புலி தன்னை யெடுத்திடு எண்பலம்
ஒலிமணி சுண்டைக் காய்போ லுடைத்திடு
மிதிபாகற் காயிடித் ததனு ளிட்டு
கொதியறு நீருநீர் கோமயங் குறநீரில்
எரிமுழக் கிழிகட்டி யெய்துமுச் சாமம்
வரையொன் பதுசாம மாட்ட வதுசுத்தி
ஓங்கி வெள்ளைக் கலைப்பாலி லூறிட்டு
ஏங்கிய நாளோ ரேழி லெடுத்ததை
அப்பா லதனி லரைத்திடு நாற்சாமம்
செப்பாய் சிறுபய ருண்டை யுலர்த்திட்டு
கூறிடு மோரிற் கொடுத்திட நான்குநாள்
மாறிலை யோட்டு மகத்தாங் குடோரியே.

### பூமணிக் குளிகை.

பேய்ப்புட லீராணி வாள முபயம்
தோய்தி கையிள நீரில வைத்திட்டு
நாற்சா மந்தா துவளைக் காயிடை
நேர்பிடி யுண்டை நிழலி லுலர்த்திடு
தோற்றிடோ ருண்டை யிடவிரோ சனமாம்
மாத்திரை தனிலறும் விஷசுர வாய்வுடன்
நூற்றிரு பதுவித மறுமநு பாநம்
இஞ்சிச் சாறுள்ளித் தைல முலைப்பால்
அஞ்சு முருங்கைப் பட்டைநீர்ச் சுக்கு
கஷாய மிவைதனி லிடவெண் சுரமும்
சுடுவலி சன்னி தோஷமற் றோடிடும்
தேனதி லிடவே தீருங் கட்டுகள்
வாய்வா னந்த வலிபக்கச் சூலையும்
நீரடைப் புக்கல் லடைப்புச் சதையடைப்
பேர்தரு நோய்கெட் டேதா னோடிடும்
வெள்ளிலை நீரி லுரைத்து விழியிடக்
கள்ளம் பேய்விஷ சன்னி தலைவலி
ஓடும் பவங்கள் வேலன் றிருவடி
சூடுங் குருமணி சொற்பூ மணியே.

### பிரளயகாலவைரவம்.

மடையன் றுருசொடு மாவெள்ளை தாணினி
அடையும் வெள்ளிலைச் சாற்றரைத் துண்டைசெய்
சாமமோர் மூன்றுதான் சென்றதை யெடுத்து
ரோம சத்துளி லோங்கிய தவ்விடை
சீத சுரத்துக் கிடவநு பாநம்
வாத மறுகிக் கொட்டைப் பாக்கள
வாட்டியோ ருண்டை யதிற்பொடித் திட்டு

ஊட்டிக் கொடுத்தெரி சுக்குக் கஷாய
மதிலோ ருண்டை யாய்க்கொதிப் பாலில்
இதிலோ ருண்டை யிடத்தின மூன்றில்
ஆகிய மூன்று மணியிற் சருவதா
மாகுங் குளிர்சுர மறுபத்து நாலறும்
ஆலங் குறுமுனி யருளிய பிரளய
கால வயிரவ மெனுமவி டதமே.

வேறு.

சிலோதாரிமணி சலமஞ்சரி.

பொரியுந்திரி கடுகும்படி கியுநன்கட னுரையும்
புகழ்சூரையின் விரையிந்துவும் லவணம்மழல் காயம்
மருவும்பல வகையொன்றிடு முபயம்பலம் வாளம்
வகையோர்தச மிளநீர்தனி லரையுந்திரி சாமம்
இலவம்பெரு விரையைந்திடை யிடையேபதை யுலர
இடவுங்கொடு மதமும்பிடி பொடியந்தர வாயு
பெருகும்புது மதுவும்பவ னமுமங்கதி விடவே
ஈரஞ்சுர வாய்வோடிரு மலுநீங்கிடு மினிதே
விடுகுஞ்சன மதிலங்கவை யுடையிம்பெறு மடைபோல்
உளதிங்கிவை முனிபுங்கவ னருளுஞ்சல மணியாம்
மலமஞ்சரி சிலமஞ்சரி சலமஞ்சரி பயனும்
வகைமஞ்சரி சிலோதாரியின் மணிகண்டிடு மாலோ.

வேறு.

இனிவிட நாற்றம் பொரிதிரி கடுபலை
மணியோர் பலம்வகை வாள மிருபலம்
கையாந் தகரை கடுவெண் சாரணை
மெய்யிரு சாம மரைத்திதை யுண்டைசெய்
ஏகிய வயிற்று வியாதியெ லாமறும்
சோகி ரசமாத் திரைசொலு முண்மையே.

### நிம்பாதி மாத்திரை.

முத்தின நிம்பப் பட்டைமுத் தக்காசு
திப்பிலி சுக்கு மஞ்சள் லவங்கமும்
ஆறு வகையு மரைப்பது கோமயம்
ஏறிய சாமநா லெடுத்தே யடைத்து
பிரமாணம் பருத்தி விரையள வுண்டை
நிழலி லுலர்த்தி ரவியினிற் சற்றுவை
எடுத்தே யடைத்து இதனுக் கநுபானந்
தொடுத்தொரு வுண்டைசூட்டிடப் பாகற்சார்
மாலைகண் டிரும்வாய்க் கெந்தளிக் குப்பா
விடுமூன் றுண்டையோ ருண்டைவா யிற்றேய்
ஆறுச் சிலந்திக் கஞ்சுண்டை தேனிடு
பாரியவஞ் சனையால் வயிறு நொந்திடில்
ஏழுண்டை வெந்நீ ரிடவது வோடிடும்
சூழந் தீர்கா விடுமுத லவனுக்குக்
கண்ணி விடவருங் காணசி யத்தறும்
எண்ணிய நாளே ழுண்டையுட் கொண்டிட
கேளாச் செவிக்கே ழுண்டை வெந்நீரிடு
நாளோர் பதினைந்து நாசிச் சதைபடர்ந்
தாலுஞ் சிலந்திவந் தாலுமறக் கானந்த
மூலிகைச் சாற்றினில் மூட்ட நசியிற்போம்
பத்தியங் காயென்ற தாகா துப்புப்புளி
அத்திதைக் கொள்கநிம் பாதிமாத் திரையாம்.

### உதாசங்காரன்.

கற்ற தவன்பரி யொன்றியோ ரிருகால்
பத்தலோ ரெட்டு பலநீலிச் சாற்றரை
வறுத்த கஞ்சால் மாட்டிடு கலவத்தில்
விழுத்தவச் சாற்றால் விழுதறை யேசாமங்

குன்றியள வெடையுண்டை செப்பிற லுலர்த்தி
உரியவ முரிநீ ரிஞ்சிநீ ருள்ளிநீர்
முருங்கையின் றேல்நீர் மிளகுநீர் வேற்கொம்பு
ரருந்தச் சமூலநீர் தான்கண்ட புளிபநீர்
வானீர் மதாவு மிவைகளா று பானம்
சுங்கங் கரிந்து சவரிடத் தீருநோ
யங்கங் குளிர்சுர மாறா ரணசுரம்
பரவெதுப் புப்பித்த சுரவாத மான
ஐயசுர மஸ்தி வெட்டைதோ ஷச்சுரச்
சன்னி வாய்விரு பத்துநால் மாமூல
நோயு மிவைக ளொடுங்கி பொளித்திடு
மீரெட்டு சூலை யறும்ரண தோஷமும்
பாரஷ்ட கர்மம் பருதியைக் கண்ட
பனிபோ லோடும் பருமாம்பேர் கண்டுநாணத்
தனிற்றோஷ மெய்புரித் தொன்ற மணியி—
உடனே யமுத முருகியழிந் தோடும்
சடநே ரமுத ரசங்கா ணுஞ் செய்மினே.

### சஞ்சீவி.

இனியோ ரிரண்டி லொன்றிட டகமதி
தனையே யரைத்துண்டை தன்னீரி லதிலிட
இறுகி மணியா மெடுத்துக் காப்பிட
முருக்கொ டுத்ததில் மூட்டிட வானந்த
மூலிகை யரைத்த புடமு மூட்டு
சுடுவதன் பாலி குறநீ ரறுநீரில்
எரித்து எடுக்க இறுகி மணியதாம்
கடுத்தூமத் தங்காய் கரிசாலஞ் செந்திராய்
தனிற்புட முப்பது மிட்டெடுத் ததனிற்
சரிபத்தா லாட்டு நீலிச் சாறிடே

மருத்துவச் சாற்று லரைத்துநெட் டடயகத்
தட்டைபய றுண்டைதா னேநிழ லிலங்க
உலர்த்தி வையறு பானத்தி லூட்ட
மலம்பிடி வாதசன்னி சயங்காச தோஷம்
பதினெண் சுரம்அறு பத்துநா லோடும்
பிடிநடுக் கஞ்சூலை மேகமுந் தீரும்
வயித்திய சிந்தா மணிநூல் முந்நூறு
மணியுடன் பற்ப வகைமுற்று மாக
விந்நூ லதனி லறைந்தமுறை யெல்லா
மாகுறு சஞ்சீவி யருந்தொழில் முற்றுமே.

**காளகண்ட மேகநாராயண சிந்தூரம்.**

சீர்பெறு சிந்தூரந் தன்னை யுரைக்கப்
பேருறை பெரியோர் மொழிவகை கேண்மோ
வாகுஞ் சிவமா மாகாள கண்ட
மேகநா ராயண சூதம் விளம்புதும்
கரிவெடி பருகி காந்தம் நறும்பு
பொரிகட னுறையோர் வேம்பூ மதுவில்
விரவிடு ரவியில்லை விடுமதுமுக் தறங்கறை
அதுசந்தந் தீநீ ராய்வடி யெடுவிண்
ணீர்முப் பதுமதி னஞ்சுகொடு விங்கப்
பதிதார நறும்பூபன் னிருசிலை நாலேழ்
பத்தொன்றை முன்வரு சத்தத்திநீர் விட்டரை
உலர்த்திப்பின் வாலுகை புள்வைத் தேயெரி
திலத்தா வரையாற் றீப மெரியோர்
கமல மிரண்டிடு காஷ்டகம் நாவிடு
விமலவிநா யகன்றனை நினையேழ் சாமத்தெடு
அருணன் போல விருந்திடு மதுபார்
கொடுதூது வளைநவ திரிதோடை மூன்றும்

பிணைவியற் சாற்றனு வீன்ற திரிகடு
இளவரு பொடியொரு கடிபரை பணவெடை
சிந்தூர மதினுடன் கரைத்தொரு கரண்டி
தேன்விட் டேகொடு தீய வினையறும்
இரண்டு நேரமு மிருபது நாட்கொள
மருளு மறுமல மந்தார காச
மீளாநோ யெலிகடி சுவாசகா சச்சப
காய சுவாசங் கடுவுப் பிசமே
விளைப்பு பதின்மூன் றெடுசன்னி மூர்ச்சை
களைத்த சிலேத்ம மூர்ச்சைமா மூர்ச்சை
இப்படி வகைநூற் றெண்விதந் தீரும்
திப்பிலி வெதுப்பிப் போட வெருகடி
அப்படி தேனி லரைப்பண வெடைதான்
செப்பிய விரண்டு காலோர் மண்டலம்
இட்டிடச் சூலை யீரொன்ப துடனே
குட்டம் பதினெட் டுக்குறை நோயுடன்
புண்குட்டங் கடிவிஷ மரையாப் புடனே
எண்பட் டிருகா லெழுந்தபுண் புற்று
உருவிரு மண்டை சூலை கண்ணோய்
அருஷி பீனிச நெஞ்சினோக் காடு
காதிற் சீயுஞ் சன்னி யடைப்பு
காதுமடல் வீக்க மநுபா னமும்போம்
கரைத்திம வுன்னித தைலஞ் சிந்தூரம்
அரைப்பண வெடையிற் கலைத்தச நாட்கொள
வாத மூர்ச்சை வரும்பித்த மூர்ச்சை
ஓதிய சிலேத்ம மூர்ச்சையோர் மூன்றும்
உன்னிய வற்புத வாதமுதல் வாதம்
சன்னியா மூர்ச்சை சிலந்தி கண்ணெரி

கறப்பான் சன்னி பதினெண் விதமும்
விறைத்திடு கடலிற் புகவிடு மிதனால்
பொரியக மோதகம் சுக்கு மிளகுடன்
அரையிள வறுப்பாய் வறுபொடி வெருகடி
முந்திய முருங்கைப் பட்டை நீரிற்
சிந்து ரமரைப் பணவெடை யிட்டு
உன்னிய விரண்டு நேரங்கொண் மண்டலம்
சன்னியின் வாதஞ் சர்வாங்க வர்தமும்
பக்க வாதந் திமிருந் தோல் வாதம்
மிக்க வேயெரி வாதமு திரவாதம்
நடுக்கு வாதந் துடுக்குவா தம்பிடி
முடக்கு வாத முட்கெண் டைவாதமும்
அசந்த வாத மருண்டின வாதம்
வாயின் கோணல் வாத நடுக்கம்
ஓயும் பித்த நடுக்கஞ் சிலேத்துமம்
நடுக்க முஞ்சரு வாங்க நடுக்கம்
ஒடுக்கு மிருமல் ஓங்கல் நடுக்கம்
தோஷ நடுக்கஞ் சுரந்தன் னடுக்கம்
காசிய கண்செவி கபால நடுக்கம்
புத்தி யின்வலிப் பும்புற வலிப்பும்
சத்தி குன்ம மெரிகுன்மம் வலிகுன்மம்
மால்செறி யஷ்ட குன்மமா வாய்வுடன்
மூலவா யுதிர கண்டிதக வுசிகை
கல்லடைப் பன்சதை யடைப்பனீ ரடைப்பன்
சொல்லிய மூந்நா றிவையிவை தீரும்
அரைப்பண வெடைசெந் தூரமா யிதனை
உரைத்திடு நிலவாகைச் சாறு தன்னில்
ஒன்றைவிட் டொருநா ளிரண்டுநே ரந்தான்

தின்றிடு தசநா டியதிலறு நோய்கள்
கெர்ப்பவிப் புருதி படுவிப் புருதியு
முற்பன விலாவிப் புருதியுளை மாந்தை
பக்கவாய் வண்ட வாய்வுடன் வாதம்
துக்கழல் வாதந் துடைவாதப் பிடிசூலை
சேர்பக்க சூலை சேர்வாத சூலை
யோனி சூலை யொடுநாபி சூலை
சீரிப் புழுதிமிர்ப் புழுவுதிர் வாய்வு
வாரியி னறுபது வாய்வுடன் சிரங்கும்
இப்படி ரணத்தா லெடுத்தபுண் சூலைக
ளெப்படி யறுமது மாவவி டதமாம்
செம்பொற் றிருவுரை தென்கயி லைப்பொதி
குப்பக் குறுமுனி கூறுமிவ் வகையே.

### ரசச் சிந்தூரம்.

ஏறிரு பதுநா லினியிரு வோரு
மாறு றிருபது மினியுடன் எரிபொடி
மாவுட னரைபரை வளைகட லதிலுளி
ல்டையிடு எரிபையா ரிசைகடி திரிநீயொடு
நீர்பட வுடையடை பரணிக னுள்ளநு
பானங் களிலிடப் பார்தனின் மானிடர்க்
கறுபதி நால்தனு வங்குள சுரமறும்
மண்டலங் கொண்டிட மகத்தான ரோகம்போம்
கண்டாற் சிவக்குங் கமலம்போ லாமுகம்
தந்த மிறுகுந் தனுவுஞ் சிவப்பேறும்
விந்தூறு மோகம் மிகுந்திடும்ரசச்
சிந்தூர மாமுனி செப்பினர் சீடர்க்கே.

### காந்த சிந்தூரம்.

சீரினி தேவி செயநாத நாற்பலம்
பாரது சுத்தி பண்பாகப் பாம்பின்றோல்

நீர்விட்டுச் சாமம்நா லாட்டிதட்டிரவி
ஆடித் துலர்த்தி வைப்பாய் சட்டியில்
மண்மூடி மண்டா னதிச்செய்து மாட்டு
குழிப் புடன்தண்டீட டெழுமுழந் தாணிட்
டெருப்பொடி போட்டுமிப் போட்டனல் பூட்டி
ஆடாதோ டைச்சாற் றிணிற்கையா னீரடி
ஆழ வகையி லரைப்பதொவ் வோர்சாமம்
தாமக் குறத்திவேர் சட்டியுள் தட்டிடு
அரைத்திடு வில்லை யதுரவி சாய்ந்தபின்
விரைத்தவத னுள்வைத்து மூடிச் சீலைசெய்
ஓதிய முன்புட மூட்டி யதையெடு
தாதலர் போலாந் தளிச்சிவக் காவிடில்
அப்படி முன்போ லரைத்துப் புடமிடு
செப்பம தாகச் சிவந்துசிந் தூரமாம்
இட்டிடு வெண்குழ விதனுக் கநுபானம்
விட்ட திரிகடு வெதுப்பிப் பொடி வெரு
கடிலோக சிந்தூரங் காணேர் பணங்காந்த
மிடவந்த சிந்தூர மிட்டோர் பணமதில்
மதுவிற் குழப்பிக்கொள் மண்டல மிரண்டுகால்
வதிசோகை யீளை காமாலை யெலிகடி
வரண்மாலை யூதுகா மாலைநீர் காமாலை
அரிவைசேர் பாண்டு குலச்சல திமிர்வாய்வு
ஈரேட்டு குன்ம மிருபத்தோர் வாய்வு
ஆரோசி கிராணி யதிசார மீராறு
பார்சோரும் ரோகம் பனிரண்டு மேயறும்
சோரசி லேத்மசோ பந்தொண் ணூற் றுறுபோம்
காந்தமும் லோகங் கடுஞ்சிவப் பிற்பணஞ்
சாந்தங் கொடிவேலி சமூலச் சூரணம்

வெருகடி தேனின் விரவி யிரண்டுகால்
உரமுடன் கொள்ள வொன்பது வாதம்
அஸ்தியி லுண்டான வியாதியுஞ் சோகையும்
பித்த கோபநூற் றிருபத் தெட்டும்
அங்கதி லுண்ணோ யறுங்காந்த யோகமும்
வங்கசிந் தூர மறைபல வழியாரொன்று
பண்பாண் டுரையா வாரைதயி லத்தினிற்
குணமாய்க் குழப்பிக் கொள்ளவு மிரண்டுகோல்
நீரினி மேலோடு நெடுநா ணோய்களும்
வேரோடு கெட்டு வினைக ளொளித்திடும்
வேந்தன் பொதிய விமலன் மகாமுனி
காந்தசிந் தூரங் கவிஞர்க் குரைத்ததே.

### வங்க சிந்தூரம்.

சுத்தித்த காரீயம் பலமூன்று பூநாக
மத்திடை யீர்பங் கவையிட் டோர்பங்கு
சிறுகச் சிறுக வுருக்கிய முகத்திற்
கொடுக்கவயச் சட்டுவங் கொண்டு கிண்டியே
துச்சாவாரை வட்டத் துத்தியிவை யிரண்டும்
பச்சைவே ராகப் பலமிரண்டு தட்டியே
ஈயத்தில் மாட்டி யிடுமுன்னோர் பங்குப்பு
மாயத்தில் மாட்டி வறுக்கச் சிவப்பேறும்
இடவா வரையி லெரித்திடு நாற்சாமம்
இடவ முளி காணோதிக ளேசெய்து
அடைவே யதனு ளதனுக் கநுபானம்
கொடுமா துளம்பூ குணமாஞ்செந் தூரத்தில்
பணமரை சீனி வெருகடி நற்சீந்தி
குணமாய்ப் புடமிட்டுக் கூட்டும் பணவெடை
கொடுவெண்ணெய்புன்னைகள்விடைகூட்டிக்கொள

மாவிரு காயச மண்டலம் வெட்டைபோம்
ஈரொன் பதுமூத் திரகிருச் சமறும்
பாற்கல்துன் மாங்கிஷ மடைப்பு பதினெட்டும்
சேருஷ்ண ரோகி சுரமுந் நூற்றிரு
பத்துநூற் றெட்டு சுரம்பித்த கோபமும்
இரத்தசலக் கழிச்சலிரு பதுமதி லுண்டான
வழலைதா கங்களு மமுதமுள் ளுருக்கி
மூட்டு முருக்கெலும் புருக்கி பனிரண்டு
மூகமெரிப் போடு காலெரிப் புடன்கை
எரிப்புசேர் மஞ்சள்தா னீராறு சுக்கிலம்
பிரமியமீ ரொன்பதும் பாரினி லிவைதான்
பறந்தே யொழிந்திடுந் திரிகடிற் சீரி
காய மிந்துப் போமஞ் சமனுகச்
சரிசேர வறுத்துப் பொடிதான் வெருகடி
சிந்தூரம் வங்க மரைகாந்த மோர்பணம்
சிந்து மதுவிற் றசநா ளிடத்தான
ஆறுகிராணி யதிசாரம் பன்னிரண்டு
மாறும் வயிற்றுக் கடுப்பு வகைபத்து
வயிற்பிள்ளை பெற்று மலநீர்சிக் கிராணிபோம்
வயிற்பணந் தானரை வங்கசிந் தூரம்
காந்தமும் லோகமுங் கல்வீர பணவெடை
போந்தத் திரிகடுப் பொடியோர் வெருகடி
பாலினிற் குழைக்கிரு பதினு ளிரண்டுகால்
கால்தான் கொளநீர்க் காமாலை விஷபாகம்
பயித்தியம் பாண்டு சோகைமகா சோகை
சயித்திய வரட்கா மாலைவிஷ வீக்க
மேலிளைப் புப்பிச மிரும லெலிகடி
மாவிளை மந்தார காசமுளை மாந்தை

காசச் சுவாசங் காசச் சயமுங்
தேச்சுர மாந்தை தீரு பிவையெலாம்
கால்மேல் வீக்கங் கதறி யொளித்திடும்
மேல்விஷ பாகங்கள் மீளா தோடிடும்
தங்கப் பொதிய வரைவாழ் மகாமுனி
வங்கச் சிந்தூர வகைதா னுரைத்ததே. ()

அயச் சிந்தூரம்.

கருந்தா தறப்பொடி காணம் பலமினி
கருங்கெந்தி காந்தந் தாமொன் றேகால்
சிவப்புக் கழஞ்சொன்று சேரஞ்சு சுத்திசெய்
தவப்பு மறப்பொடி சம்பீரச் சார்சுத்தி
இலைச்சார் மணிச்சாறு மறத்தி யினிற்சுத்தி
உலகாந்தங் கோட்சா ரவித்திடச் சுத்தி
வப்புறு நாற்ற மாறம் புடச்சுத்தி
சிவப்புமார்ச் சாலநீர் செம்பீரச் சார்சுத்தி
கூட்டி யிடவைந் துங் குறநீ ரொருசாமம்
ஆட்டியா வின்னீருற் சாரொரு சாமம்
† தூதுளை நீரிற் றுனரை யோர்சாமம்
மாதுளைப் பழச்சாறு மத்திப்ப தோர்சாமம்
முருக்கிலை நீரில் மூட்டியோர் சாமம்
பெருக்க வழித்தொரு வட்டாய்ப் பிடித்திட்டு
ரவியி லுலர்த்தி நாவத்தோல் தாணிடித்து
நற்புதுச் சட்டியுள் ளிட்டிள வில்லைவை
மூடிமண் செய்தெரி முற்றிடு மூன்றுநாள்
வாடாமற் றீயெரி மாட்டோர் விறகினால்
ஆறி யெடுத்ததிற் குறநீர் விட்டு
மீறவோர் சாம மரைத்துப் பிடிவில்லை
பதிவா யுலர்த்திப் பாற்குறத் தியன்னம்

† தாதிலை என்பது எட்டுப்பிரதி.

புதியவோர் சட்டியிட் டேவில்லை யுள்வைத்துச்
சிலைமூன் றுசெய்து திறமாய்க் குறிப்புடம்
கால்முழ மட்டுங் கடிய வெருமூட்டி
ஆறி யெடுத்துமுன் னப்படி யேழ்புடம்
நீறிடுஞ் செங்கழு நீருப்புப் போல்நிறஞ்
சிந்தூர மாகுந் திரமா யெடுத்தடை
பந்தூ ரிதற்கநு பானத்தில் மண்டலம்
பகரக் கேள்திரி கடுகு வெதுப்பிப்
பொடியோர் வெருகடி பெரிய சிந்தூரம்
தோஷம் பொடிபடு மீரெண் சூலைபோம்
இருபண வெடைசிந் தூரம தெனுமே.

**ரசச்சிந்தூரம் திராவகத்தில்.**

† வைப்பினிற் பாத ரசமொரு சேரொடு
‡ உப்பு நறும்புவோ ரிருபது முன்சிலை
ஒன்று தாரஞ் சேரிதி * விரண்டெடை
நிலையுள சங்க நீரிற் பிசறியே
கடைமதி லரையிட் டெரியிடு சாமம்நால்
அடமதி லேற யெடுத்திடு சர்க்கரை
தேனி விடமா வர்பெருஞ் சூலை
சுரந்தோஷஞ் சன்னி சுக்குக் கஷாயம்
இஞ்சிச் சாறுடன் மிக்க முலைப்பால்
வெள்ளுள்ளி யின்னீர் மிளகுக் கஷாயம்
திரிகடு பலைநீர் தழல்சுடு நீரில்
தானனு பானம் வகையினை யறிந்து
வினைகுணந் தெரிந்து மேதினி யோர்க்கு
துகையறிந் திடநோய் தூரிதம தறுமே. ()

---

† சிவப்பினிற் பாத ரச-என்பது எட்டுப் பிரதி.
‡ உவர்ப்பூ. * லிரண்டரை, என்பது எட்டுப் பிரதி.

### செயரசம்.

தங்கம் பலமொன்று தாரம் எண்பலம்
பொங்கலீ ரெண்பலம் பூமான் சிலைக்காசு
செம்பருத் திச்சார் சேர்த்துப் பிசறியே
அம்பெருங் குப்பி யடைத்தெ ரித்திடு
தொண்ணூறு நாழிகை தோன்ற வெரிமுத்தீ
எண்ணெய் ரவிபது போற்சிவப் பேறும்
சொர்ணச் சிமிழிற் றோண்டி யடைத்திடு
என்னும் வகையறு பானங் களிலிட
ஏலாதி யசுவ கெந்தாதி திராட்சாதி
பால்நெய்தேன் வெல்லம் பழநீர் வெண்ணெயும்
திரிபலை திசைமூலஞ் சேரஷ்ட சூரணம்
திரிகடு கற்பூ ராதிச் சூரணம்
செங்கருப் பஞ்சார் சீனிதாம் பூலச்சார்
அங்கதி லநுபா னங்களீ ராயிரம்
இவ்வகை யறிந்து இடவெகு நோயறும்
அவ்வகை சொலச்சூத் திரத்தடங் காநெறி
சொலவுமே தேகஞ் சொர்ணம தாகும்
பிலமுமே யானைப் பெரும்பசி தீபனம்
வீரிய விர்த்தி வெகுகளைக் காந்தியும்
காரிய ரோமங் கருத்திடும் பல்லும்
இருக்கும் வயசோ ராயிர மிதனாற்
குருக்குணந் தேகம் வச்சிரக் குச்சுபோல்
சால வசியம் பிறந்திடும் போகம்
நரைதிரை போகும் மறலியு மணுகா
மாதவ முனியரு ளியவதி செயரச
மேவ ரவிமதி நாட்டிற் பசும்பொனே. ()

### அப்பிரகச் சிந்தூரம்.

காக்கை பொன் னின்குணங் காண்வகை கேண்
ஆக்கை யழிபா தறிந்திதைக் கொண்டிட [மின்

தீயி லொக்குங் கருகிடுஞ் சிறிடும்
மாயும்வெண் ணீறாய் மறுகிச் சலமாகும்
கிட்டம தாங்கிளர் சோறுபோ னிற்கும்
பட்டே யெரியும் பறக்கு மிப்போல்
தீயினில் வெந்து சிவந்துகுழம் பாகும்
காய்கையிற் காக்கைபொன் காணும லோடிடும்
அறிந்திதைத் தள்ளி யனலில்வைத் தூதயில்
மறிந்துக னகம்போல் மாயாம னின்றிடில்
நல்ல திவப்பிரகம் நான்குசேர் வாங்கியே
கொல்ல னுலையிற் கொழுப்போற் காய்ச்சியே
அப்பா லதனி லமிழ்த்திடு வோர்தரம்
நீர்க்காடி குப்பைக் குடையபொன் னாங்காணி
தீரச்சு வேதனஞ் செய்திடு மூன்றுநாள்
நேராய்த் தகட்டுக்கு நேர்கூட்டிக் கோணியுள்
காடி யதனிற் பிசைந்துகொ ளந்த
நீரோ டிறுத்து வுலர்ந்தநவ நீதமும்
வெட்ட தனிற்கலைப் பாற்குட் புடமிடு
மாவிரண மூலியால் மாட்டச் சிவப்பேறும்
நரிவாய் முள்ளங்கி யிஞ்சுமப மார்க்கம்
உரியாத வாழைக் கிழங்குக் கொழிஞ்சியும்
தாழை மறக்கா ளையுடன் சாரணை
கொண்ணை யரோசிகம் நீக்கிக் கொடுப்பையும்
பாரபச் சரிசியும்புடன பாற்காளி
கார்செறிக் கொட்டைக் காந்தைப் பிரண்டையும்
புளிச்சா னிவையீ ரெண்மூலி பிழிந்திட்டு
வழிச்சிடு முள்வெண்ணெய் வாங்கிப் பிசறிட்டு
வரட்டியொரு கூடை மாட்டிப் புடஞ்செய்து
தாட்டியோ ரேழொன்றிற் கூட்டிடு மும்மூன்று
புடமிட் டெடுத்துப் போராலம் பட்டையில்

கடமிட் டயிலமுங் காயநீ ரிட்டிட
ஆலம் பழத்துக் கதிக சிவப்பொடுங்
காலனு மாண்டிடக் காணுண் பணவெடை
கலைப்பா லதனிற் காணவெப்பஞ் சிந்தூரம்
மலைப்பாகும் பஞ்சா வமுதப் புடமிடச்
சயித்திய சிந்தூரந் தானுப்ச் சிவந்திடும்
செய்திடு நதிகட லாகுஞ்சொர் ணத்தை
இப்படிக் கைமுறை யாகச் செய்து
சிந்தூர மப்படி வெண்ணெயிற் பணவெடை
அமுதசஞ் சீவியிற் சர்க்கரையோ டாட்டி
குமுதப் படவே குழைத்திதைக் கொண்டிடில்
மேக மிருபது மேற்பித்தம் நாற்பது
போகுஞ் சுரமுஷ்ண கோபமுந் நூறும்
நீரிழி வீரெட்டு நேர்ஞாணத் துட்புணும்
வேரொடு கெட்டு வினைக ளொழிந்திடும்
பணவெடை பானத்தில் மண்டலங் கொள்ள
மந்தார காச மற்றுள காசம்போம்
அண்ட இரும லெலிகடி யுப்பிசம்
கோழை சுவாசக் காசச் சுவாசமும்
ஈளை யெலிகடி யீரொன்ப துடனே
எண்பது வாத மிதிலுற் பவநோயும்
பண்பஷ்ட குன்மம் பதின்மூன் றிருவாய்வு
தீர்ந்திவை யாழியிற் சேர்ந்தே யொளித்திடும்
காந்தயச் சிந்தூரங் காணோர் பணவெடை
கரிசாலை நீரிற் குழப்பி யிரண்டுகால்
அரைமண் டலங்கொள வறுஞ்சோகை காமாலை
பாண்டு விஷபாக மூதுகா மாலையும்
உதிரடைச் சர்வகா மாலையுந் தீர்ந்திடும்

இரண்டு பணவெடை நல்லயச் சிந்தூரங்
கொண்டிடு குமட்டிக் காய்நீரிற் குழைத்திதை
உண்டி ரண்டை விட் டொருநாள் தசங்கொள
அண்ட வயிற்று வியாதி யறுபதும்
குருவைக வசிசெந் ராமைநீர்க் கோவையும்
துகவட்ட பீலிகை நீரின்குன் மமும்
பெரிய வயிறு குழுவ மகோதரம்
அரிய வியாதி யறுத்திடும் லோகமே.

## தாம்பிரச் சிந்தூரம்

ரவியினை யீச விறகுபோற் றட்டி
தொகைபல மொன்று சூட்டிடச் சுத்திதான்
உப்பைப் பழச்சாற்றி லூட்டி யரைத்ததைத்
தப்பி யுலர்த்திர் தசமெரு முட்டையில்
புடமிட் டெடுத்திதைப் பூட்டிக் கழுவியே
தடமிட்ட பொத்தலை தானறை யரக்கம்பால்
விட்டரை சப்பிரச் சார்தான் மாட்டியே
பட்டிடப் பூசிப் பருதியிற் காய்ந்தபின்
புதுச்சட் டியினுழி யுப்பிட் டதன்மேல்
பதியைந் தரசிலை படுத்ததில் வைத்ததன்
மேலுறக் கட்டிட் டதன்மேலந் திலைவைத்து
கடலுப் பொருநாழி மேலிட்டு மூடியே
சந்தில் வெண்கல் லுஞ்சுடு சோறும்
சாடவ ரைத்துத் தடவி யுலர்த்தியே
அடுப்பினில் வைத்தே யையாறு நாழிகை
எரித்திதைப் பார்க்க விரவி மரகதப்
பச்சை நிறமாய்ப் பரிந்து சிந்தூரம்
உச்சித மாகு முயர்த்தி மகாதொழில்
அடைத்தடி தனுக்கறு பானந் தான்சொல

படைத்தொரு பணவெடை பழச்சாற்றி லிட்டிட
வாந்திப் பிராந்தியேல் வைத்திடும் பாற்கஞ்சி
சேர்ந்து கொடுத்திடத் தீரு மருந்திடும்
அதற்குப் பணவெட் டிடுமெடுத் தார்பித்த
மதுவிற் கொடுத்திடு வாங்கிடும் பீலிகை
ஈளை யிரும விளைப்பஷ்ட குன்மமும்
மீளும் பெருவியாதி நீராமை மேல்வாய்வு
வாங்கிடுங் கெண்டை வயிற்றுநோய் தானறும்
ஓங்குந் தலைப்பயித் தியங்கோடி யொளித்திடும்
கோமான் றென்கயி லாயக் குறுமுனி
தாம்பிரப் பச்சைக் கிளிபோலச் சாற்றுமே.

## ஏமபீஜச் சந்திரோதயம்.

தங்கத் திடைரவி சாற்றி யுருக்கிட்டு
லிங்கமு மாட்சிய நிலைநாற்ற மூவகை
அவ்விடை கூட்டி யவைதச மாய்வைத்துச்
செவ்வாய்ப் பரிரவி சேர்ந்துரு கையிலே
வாட்டிய காரியை வைத்துப் பொடியிட்டு
நீட்டி யதிற்புங்க நெய்தனி லிட்டதை
ஊதுரவி யற்றுப் போகுமிடை நிறுத்தே
ரவியைந் திடையிட் டுப்பொடி நெய்யும்
இப்படி பத்துத் திரம்ரவி கூட்டியே
செப்பும் பொடிநெய்யுஞ் சேர்பத்து மூட்டியே
பார்க்கப் பரிதான் பவளப் பருதியாம்
சேர்க்கு மெடையினிற் றேற்ற விடையற்றல்
கூட்டிப் பருத்திப் பூகுறநீ ரிரண்டுநா
ளாட்டி யுலர்த்தி யதையிடு குப்பியில்
அடைத்தரை வாலுகை யாமோர் விறகினல்
உடைத்தெரி தொண்ணூறு நாழிமுத் தீயும்

மரூறி யெடுத்திதைப் பார்க்கப் பருதிபோல்
கூறிய கங்கங் கொடிய பவளமாம்
பணவெடை யிரண்டுகால் பாலில்கற் பூராதிக்
குணமிடுஞ் சூரணம் கூட்டிக் குழப்பியுண்
நாள்மண் டலத்தில் நரிபொற் குளைச்சல்போம்
தேனண்ட வாய்வு சிரரோகம் நாசமாம்
வலிகுன்மம் வாந்தி யரோசிகம் பித்தம்
பலியும்நீர்ப் பாண்டு பறிந்திடுங் கன்ளுசி
வாயுபிடி வாதம் மாசிலேத் துமமறும்
ஆயுமிச் சிந்தூர மதுவொரு பணவெடை
அப்பிரகச் சிந்தூர மதுவொரு பணவெடை
செப்பிய சீந்திச் சர்க்கரை நாற்பணம்
வெண்ணெயுட் கூட்டி யிடுரெண்டு கால்தசம்
எண்ணிய நாளி விரும லரிசயம்
ஊஷ்ண கோபமொடு மேகத்துட் புண்கள்
பீனிச மேகம் பித்தத் தெரிச்சலால்
பித்தத்து மேகம் பெலத்தவெண் மேகம்
அத்திடு வாதம் அய்யங் கழிமேகம்
நீர்மே கத்தோ டிருபத்தொரு மேகமும்
வேரொடு கெட்டு வினைகளைந் தோடிடும்
வங்கச் சிந்தூரம் வளரும் பணமரை
தங்கச் சிந்தூரந் தானொரு பணமுடன்
கூட்டிடு நற்சீ ரகப்பொடிமுப் பணமுடன்
மாட்டிடு வெண்ணெயுள் மத்தித் துட்கொள
முகங்கால் கைகண் மூடி முழந்தாள்
படஞ்செவி யகங்க ளெரிப்பதெல் லாமறும்
பித்தகோ பசிரம் போந்திடு நூற்றெட்டு
உத்தைய கோப மொருமுந்நூற் றெட்டறும்
ஈளை யிரும லெலிகடி மந்தார

காசச் சுவாசசிக் கழிச்ச லிவையறும்
வங்கமு மப்பிரக வளருமீர் சிந்துரந்
தங்கச்சிந் தூரமுந் தான்முப் பணவெடை
கூட்டித் திரிகடு கொடுமிஞ்சி நெய்யினில்
மாட்டி யிரண்டுகால் மண்டல முண்டிட
அக்கினி மந்த மறுந்தீ பனமாம்
சொக்கிய காசந் தொலையுமீ ரொன்பதும்
அண்டத்தின் வாயு வதுவொரு பத்தறும்
அண்டச்சூ லையுடன் சூலையீ ரெட்டும்
போகுமூ வெட்டும் பொடியாஞ் சயரோகம்
ஏகிய நீரிழி வீரா றுமோடிடும்
ஆவரை பஞ்சாங்கத் தயிலத்திட வேகிடும்
நீரிழி வெடுத்த பிளவையு நீங்கும்
தீராத மேகஞ் சயங்காசந் தீர்ந்திடும்
ஆராய்ந்து கொளவங்கம் பரியப்பிர கத்தையும்
தங்கச் சிந்தூரந் தனக்குளறு பானம்
அங்கறுந் தீரா நோயது மாறிடும்
ஆனைப் பிலமா மரும்பசி தீபனம்
மானே விழுசிவப் பாகும் பரிந்துண
சொர்ணச் சிலைபோற் றோற்றிடுந்தேகம்
பொன்னேர் மடவியர் புல்க வெகுர்ந்திடும்
வீரிய மெத்தவா மேலாகு மோகம்
ஆரியன் போல வழுதக் கலைகாந்தி
சம்பங்கிப் பிச்சு மந்தாரை போலவே
அங்கமும் வாசனை யாகிடு மாயுசு
வளருந் தறுவு மிறுகும் நரையறும்
வளருங் கொடுந்தந்தம் வச்சிரக் குச்சிலாம்
தேகஞ் சிவக்கும் திருவுகள் வசியமாம்
ஆகம் பெருகு மறிந்திதைக் கொண்டிடத்

தங்க சிந்தூரஞ் சாற்றரும் பொதிகைப்
புங்கவன் கும்ப முனிதான் புகன்றதே. ().

**பூரணச் சந்திரோதயம்.**

சுத்தினி யெட்டுபெரிச் செம்பதொன் றிட்டுப்
பத்திய சாவற்பூ கெந்தியீ ரெண்பலம்
துருசொன்று துத்தம் † பொரியெண் காசி
வயிரச் சிந்தூரம் மாவீரி காசெடை
அரைப்புப் பருத்திப் பூச்சார் குறத்திப்பால்
உரைப்பது பொற்றலைச் சாறும்விட் டாட்டிடு
உலர்த்தி ரவியி லுலரவடை குப்பியில்
நிலைத்துவை வாலுகை நீட்டெரி முத்தீயும்
தீயது தொண்ணூ றிடுகடி கையதாய்
எண்ணேறு குப்பி யெடுத்திடில் மகாபூர்ணச்
சந்திரன் போலத் தனிமேசிந் தூரமாம்
அந்தூற் பரணி யடைத்ததைப் பூசைசெய்
இடவரு பானத் தினிலே பணவெடை
சடமதுட் கொள்ளச் சயங்கிராணி மூலம்போம்
மேகமிரு பத்தொன்றும் வெகுமூத் திரமும்
போகுமா வாதம் பொடியிட்டுப் பித்தம்போம்
ஐயத்தி னாலே யடைந்த சயங்காசம்
மெய்யற்ற ஈளை யிருமலெலிகடி
தீராத நோய்களுந் தீர்ந்திட வருபானம்
ஆராய்ந்து வெவ்வே றறிந்துகொள் மண்டலம்
காய மிறுகுங் கனல்போ லுமேனி
ஆயுளும் வளரு மழியாது காயந்தான்
பூரணச் சந்திரன் போல்முகஞ் சோதியாம்.

---

† பொரிவெடி காசெடை
ஆரை சிலைதாரம் மாவீரி காசெடை
என்பது எட்டுப் பிரதி.

வீரிய விர்த்தி வெகுபசி தீபனம்
வச்சிரத் தந்தம் மயிர்க்கால் வளர்த்தியா
முச்சித விந்து உறிற்கெர்ப்பஞ் சோதியாம்
பூரணச் சந்திரோ தயம்புகழ் மாதவ
வாரியன் கும்ப முனிதா னறைந்ததே. ()

## பாலசந்திரோதயம்.

இனியெடை கல்லுப் பிடுகுற மாமலர்
தனிநீர் தன்னாற் றுனரை திரிநாள்
* எடுபலம் ரசநா லெட்டதி லூட்டக்
கொடுவறு நீரிழை யெட்டது கூட்டி
அப்பிரகந் தன்னோ டண்டத் தோடிடு
† உப்பொடு திரிகாரீய மிருசாரி பண்ணையும்
நீலிவ கைக்குப் பலம்நாலெண் ணொருபது
நாலறி நீர்தனி லரைப்பது தசநாள்
திரமாகச் சுருக்கிடு ‡ விண்ணீரில் புகட்டி
யெடுத்தன்னீ ரெண்படி யிட்டிடு முன்போல்
இப்படிப் பன்னொன் றிட்டிட விட்டிட்
அப்படி யேபல மாட்டு சுருக்கு
கடலுப் பேகிடு சிச்சிலி யாட்ட
உடலுற்ற நீரது வறுமொரு வீரம்
போட்டிடப் பூரச் சுன்னமு மன்னேர்
மாட்டு சுருக்கதை நாளது வாட்ட
வாலைய தாகும் வைத்திடுந் தீயில்
நான்முக மானூத் துக்கசை யாது
கைவிரல் தீயிற் காய்கையில் வைத்திட
மெய்கவி ரென்றே விறல்தா னுலர்க்கும்

---

ஏட்டுப்பிரதி.

* இடுநாற் றச மெட்டதி.
† உப்பிரு.
‡ சுட்ட தரைத்துநீ

வலித்திடுங் குளிரு மிதுபால ரசமாம்
நாற்பத் தொருபல நேர்பதி னறது
நாற்கதலிப் பருத்திச் சாற்றிணு லாட்டி
அறைவ ளைக்கட வாலுகை வைத்து
எரிமும் முப்பது நாழிசென் றபின்பு
மாபால சந்திரோ தயமே கண்டிடு
வேயடை யிரவி மாசுது பாலை
வாருமே யிதற்கா மநுபா னத்தே
இடவெகு சொன்ன கடலா நோயறும்
வெகுசித்தி சகத்தில்தா னூற்று நாற்பதுநா
ளெண்ணெய் போமங் கநுபா னத்திட
வகைகண் டேயிட வேவெகு நோயறும்
பிணிகண் டேபெரு நூல்வழி யேகொடு
வாலைய தாகும் வயதீ ராயிரம்
சுக்கில விர்த்தி சுத்தம் பனமும்
மிக்க விளந்தைக் கன்னிய ருடனே
போகி கிரீடித் திடவெகு சித்தி
காமிய மட்டில்துத் துவொடும தமும்மடங்
காதது வெகுகால வசியஞ் சித்தி
சித்திய தாகவே யவையு முதவும்
சகலக் குமியுந் தான்வந் துலவும்
தனுவுஞ் சிவமா மருகுந் திரையும்
நரையு மொழியு நமனு மழியும்
முனிபுங் கவனர் மொழியும் பலசிந்
தூரசிந் தூர மிதுகண் டிடுமே.

**காந்தச் சந்திரோதயம்.**

உருளை பயிற்கல் லொட்டிடன் கைவகை
யருளு மிவையைந் தறிந்துதான் றள்ளியே

ஒன்று முதலை யுளவூசி தான்கவ்வும்
நன்றாசிக் காந்தத்தில் நான்குசேர் வாங்கியே
அப்பிர கம்போ லரைத்துச்சத் தாய்வாங்கிச்
செப்ப மாய்ச்சேர்த் திடுஅப் பதினொன்றும்
பார்க்கப் பருதி நிறமாய்ப் பளீரென்னும்
சேர்க்க இவையெட்டுக் கொன்றிடு செம்பரி
இனியெடை யெட்டு எடைகெந்தி மாசிலை
தனியே குறநீர்த் தாரை வில்லைசெய்
மணற்புட மேழு மாட்டு லகுபுடங்
குணப்பட இட்டாற் கொடிய பவளமாம்
எடுத்து ரவிமதி யிட்டிட மாற்றாகும்
தொடுத்துப் பணவெடை சுட்டிடப் பால்நெய்யில்
இட்டிடக் குன்ம மீரெண் சூலை
விட்டிடுந் திப்பிலி சூரணத் தோர்பணம்
கொண்டாற் சயவாத வர்பு சுரஞ்சன்னி
அண்டத் தெழுந்த நோயறு மநுபானம்
கண்டிதைக் கொண்டாற் கணத்திலெந் நோயும்
மண்டித் தெலிகடி மாலை மகாசோகை
தீரு முகமுஞ் சிவந்துமின் மின்னிடும்
தீரு நரைதிரை சிவப்பா யிருவிழி
பாலன் முகம்போற் பனிநீ ரொழுகிடும்
சாலவும் வீசுஞ் சுகந்தாதி கஸ்தூரி
வீசுமே யதனில் வெகுகளை காந்தியும்
தேசு தொடுக்குந் திருமேனி தனிலே
அழகுந் தருஞ்சிவ மாவூசி காந்தத்தைப்
புளகித் தருக்கப் பூரண சந்திரனே.

### சந்திரோதயம்.

ஆடக ரேக்கது வோர்பல மொன்று
கோடகச் சத்தி தூக்கியி ரெண்பலம்
புண்ணிய மெண்பலம் போட்டிடு கலவத்தில்
நண்ணும் பருத்திப்பூச் சாறரை வாழையில்
ஈர்நா ளரைத்தெடுத் துப்பிடி வில்லை
பூரோ ரவியி லுலர்த்திப் பொடித்திட்டு
அரைவளை குப்பிக் கடைத்திட் டோர்நா
ளெரியிடு திரிதீ யாறி யெடுத்ததைப்
பார்க்கமூன் றும்பிறை பனிமதி போலச்
சேர்க்க விதனைச் செலுத்திப் பாணியில்
கற்பூ ராதிச் சூரணத் திற்கலந்
துற்பன வெள்ளிலை யுள்ளோர் பணவெடை
இட்டிட வெண்சய மீளையெலிகடி
கட்டு மலஞ்சிக் கிராணி கடுப்புடன்
மாலை குன்மஞ் சுரமேகம் வெட்டை
சூலை குடைச்சல் துன்மாங் கிசமுடன்
தீரும்வெண் பித்தஞ் சிலேத்தும சுரநோய்
பாரும் வியாதி பறந்தே யொழிந்திடும்
கற்பம தாகக் காணிதை யருந்தக்
கற்பாந்த மாகக் கால மழியாது
வீரிய விர்த்தியா மெல்லிய ராசையுள்
பாரீர் சையோகம் பண்ண வெகுவிர்த்தி
காயஞ் சிவக்குங் கண்கள் சிவப்பேறும்
ஆயுளும் பெருகு மருள்விந்து கட்டில்
ஆல மிதுசித் தடையுமூன் றும்பிறை
போலச்சந் திரோதயம் புகன்றனன் முனியே.

## அப்பிரகச் சந்திரோதயம்.

மாளா வப்பிரகம் வாங்கிக் † கொண் ணீரொடே
மீளா தெரியிட்டு வெந்தால் நவநீத
வெண்ணெ யுடனே வில்லிட்டுச் ‡ சுன்னமா
நண்ணறும் புச்சுத்தி நாட்ட விடையிட்டுக்
கூட்ட மெழுகொடு வெண்ணெய்நற் குன்றியும்
மாட்டுப் படிகம் வகையஞ்சு மித்திரம்
சித்திரை ரத்தஞ் செலுத்தி யரைத்திடு
உற்றிடு நாள்வைத் தூதச்சத் தாகும்
பின்றன் கறட்டோடே பிரட்டிடு மித்திர
முன்று னேயூத முழுதுஞ்சத் தாய்வரும்
சத்து எடுத்துத் தானுந் திருகாரி
சித்தநாற் சாமம் சோமறு பாடை
மணவலை யெடையைந்து மாட்டி மதுவினுல்
உழல வரைத்துருக் கப்பிரகச் சத்து
மித்திறங் கூட்டிக் கிராசியோ ரந்திரம்
சுத்திசெய் பேயப்புக் கதலிநீர் தேனெண்ணெய்
வெல்லம்நெய் மேஷப் பால்தேங்காய் சதிரப்பால்
எல்லாஞ் சமன்சேர்த் திதில்வார் கவசித்து
ஆதித்தன் போனிற மாய்விடும் பன்னொன்றில்
பேதித்த சத்து பலமொன் றெடுத்திட்டு
ஆடக மொன்றதிற் சேர்த்துருக் கிட்டுப்
போடதி னேர்செய விண்ணதிற் பூட்டியே
பாதி நறும்பூ பகர்பொற் றலைநீரால்
வாதிமுன் றட்டான் வளமா யரைத்தபின்
சிர்க்காரங் கூட்டிச் சேர்த்தயச்செப்பிட்டு
முற்சீலை செய்து புடமூன் றிதிலிடு

---

† கொள் நீரோடே ‡ ஊத ஏட்டுப்பிரதி.

சிந்தூரந் தானுஞ் சேர்ந்தரு ணன்போற்
கந்தூருங் காந்தி களங்கற்ற சோதிபோல்
திராட்சாதிச் சூரணத் தேயிட் டொருபணம்
பார்சயக் காசஞ் சுரம்வெப் பிளை
மந்தார காச மகாவெட்டை சோகைகள்
தேக மிளைப்பு சோத்தி மாதிரம்
மேக மிருபத் தொன்று மிதிலோடும்
குன்ம மரோசிகம் வாந்திமகா பித்தம்
சேருமூ லக்கிராணி சேர்சந் திரவாதம்
சூரிய வாதஞ் சூசிகா வாதம்
பாரும் நாலாயிர நோயும் பறந்திடும்
தீபன மாஞ்செடம் வச்சிர தேகமாம்
மானவல் நோயு மறுகி யொளித்திடும்
வீரிய மங்கை யுடனே கிரீடிக்க
ஆரியன் வேகமோ ராயிரம் பத்தாது
மாப்போல நாவது மாவற்ற தோடற்கு
உடம்போற் பணவெடை யூட்டத் துதிக்கைநீர்
போல வமுதம் புறப்பிடு மைப்போல்
தூவிலி ரொன்பான் தோஷமற் றோடிடும்
அமுத ரசச்சிந் தூரமிது வாகும்
திமிர்தமா லப்பிரகச் சந்திரோ தயத்தினை
ஓதிடத் தென்கயி லாய மிரும்போதி
மாதவ னுருரை மாநிலத் தோர்க்கே. ()

### லோக சந்திரோதயம்.

கருந்தா தரைப்பொடிக் காணிவை சுத்தி
சுமருந் தோரிதழ்த் தாமரை யையிடித்
தெண்ணிலி செயகார சாரமிட் டேப்பிசைந்
தாலி லவைச்சா றுலர்த்திப் பிசறியே

கூட்டியே காரி குழற ரவியில்லை
நாட்டியே மூன்று நாள்சென் றெடுத்திடக்
கோவை பேறுங் குறட்டைக் கனிதான்
பிசைந்தா லதனில் மத்திக்குங் கையினில்
இப்படி யேழு தரந்தா னுருக்கிட்டுச்
செப்பு வுருக்குக் குருக்கறள் தள்ளித்
தனியே யெடுத்ததைத் தான்முன் னிருவகைக்
கனியும் பிசைந்து கலந்தூத வேரவி
ஆகு மிதனை யடைவாகச் சோதித்துப்
போகும் ரவியொன்றிற் பூட்டுபரி கால்தான்
† காரசார மந்திடை சாரம்
மாசுத்தி நாற்ற மாட்டிக் குறத்திப்பா
விட்டரைத் திட்டுவா லுகையெரி யிரண்டுநாட்
கொட்டே சிந்துரங் கொடிய பவழமாம்
மதியில்நாற் றொன்று மாட்டப் பசும்பொன்னும்
பதியமுளி கரணங்கள் பண்ணநன் றாக
பரணி யடைத்தநு பானந் திரிகடுகு
உரியே வெருகடி யோர்பணஞ் சிந்தூரம்
தேனிற் குழைத்துத் தினநாற்ப துட்கொள
மானே யெலிகடி மந்தார காசமும்
இரும விளைப்பு மிளையீ ரொன்பதும்
வாதமோ ரெண்பதும் வாதத் துறுநோயும்
பாதிசேர் குன்மம் பதினெட் டிருவாயு
வீக்கமீ ரொன்பது மேல்மூன்று மூர்ச்சையும்
போக்கு மிவைகள் பொடியாஞ் சயரோகம்
கையா னீர்தனிற் காணரை மண்டலம்
மெய்யாம் பணவெடை மீற விரண்டுகால்
கொண்டிடச் சோகை விஷபாகம் பாண்டுநோய்

---

† கார சார மொன்றிடை என்பது ஏட்டுப்பிரதி.

மண்டை வியாதிகா மான்றவீ ரொன்பதும்
கெண்டை கவுசிநீ ராமை பொருமையும்
தீருங் குமட்டிக்காய்ச் சாற்றிடு பத்துநாள்
பேராய்க் கொடுக்க யிரட்ச திரட்சியும்
ஆகும் வயிற்றில் வியாதியொரு நூறும்
போகுநீ ராமை நீர்க்கோவை குழுவமும்
குன்மம் பெரிய வயிறு மகோதரம்
பாரு மிவைதான் பறந்தே யொளித்திடும்
பாலிற் பணவெடை பாரித் துட்கொள
காலமோர் மூன்றுங் கலந்துவஞ் சிக்கலாம்
காயமுங் கல்லாங் கண்கள் சிவப்பேறும்
மாயும் வளரும் மழியாது காயந்தான்
பல்லு மிறுகும் பசிதீ பனமுமாம்
சொல்லும் நரைதிரை துருசற் றெழிந்திடும்
லோகசந் திரோதயம் நொடிக்குள் ரவிரச
யோக மகத்தீ சுரன்று னுரைத்ததே.

### பூநாகச் சந்திரோதயம்.

பூநாக மாப்பாலிற் போட்டிடில் மண்கக்குங்
கோனே யெருமை மலத்தினிற் கூட்டியே
அடைதட் டிடவே யதுதா னுலர்ந்தபின்
கடமிட் டெரித்திடக் காணது பற்பமாம்
வாதக் குடோரி திசைக்கொன்று காடியும்
போதஞ்சு மூத்திரம் பூட்டி யரைத்திட்டு
வில்லைசெய் நாளம் விட்டிதை யூதிடச்
சொல்லிய செம்பு துருசாத் தோன்றிடும்
எடுத்திச் செம்பை யிதமாய்ச் சோதித்து
மடித்ததி ராக்கெட்டுக் கொன்றி டாடகம்
சாரச மிங்தெடை தாக்கிப் பொடித்திட்டுச்

சேரிடை நாற்றஞ் செலுத்திக் குமரிப்பால்
பருத்திப்பூச் சாறும் பாங்கா யரைத்திட்டு
இருத்தி யுலர்த்தி யிடுவரை குப்பியில்
எரித்திடு முத்தீ யிடுமூன்று நாளும்
தரித்திடும் பூநாகச் சந்திரோ தயமாம்
எடுத்துப் பரணிபி லிட்டு ரவிமதி
கொடுக்கத் திசைக்கொன்று கொள்ளுமாற் றுகும்
பார்த்ததைக் குன்றிப் பருக்க க்பாடத்தில்
ஏற்றுமோர் கிராணி யிருபது மாறிடும்
பானையிற் கண்ணு யிரஞ்செய்து தோற்கட்டிப்
பூநாகச் சிந்தூரம் போடு சலம்விட்டுத்
தோலதை வாங்கத் துவார மடைபட்டு
மேலேறி நிற்கும் விழாதுதுளி நீர்தான்
இப்படிச்சோதனை பார்த்தே யெடுத்திட்டுச்
செப்ப முளிகா ணங்கள்செய்திட்டுக்
கொண்டால் நரைதிரை கூடிய நோயற்று
வண்டோடு போல மயிர்தான் கறுப்பேறும்
சட்டைகள் தான்வந் தனுவுஞ் சிவப்பேறும்
அட்ட இலக்குமி யதில்தாண் டவமிடும்
கோனுகு மெங்கோன் குழந்தைக் குருமுனி
பூநாகச் சந்திரோ தயந்தான் புகன்றமே.

**கேந்தக சந்திரோதயம்.**

கேசர்நெய் குத்தி யுருக்கு நறும்பூவை
தாசா மிளகு தக்காளி நீரிற்சாய்
‡ அஞ்சு சம்பீர சாற்றிற் கொதிப்பித்து
மிஞ்சுந் திரிநாள் விடநறும் பூச்சயம்

‡ அஞ்சு தசம்பின் என்பது எட்டுப்பிரதி.

தாசாம் பூநீர் சாறிதின் மூன்றுமே
சாதிமாந் தளிர்நீர் விட்டரை மூன்றுநாள்
களச்சிப் பருப்புநெய் காணரை மூன்றுநாள்
குளப்பிப் புரசநெய் கொண்டரை யைந்துநாள்
வாதக் குடோரி தசத்தொன்று மித்திரம்
ஓதி யரைத்து உருட்டி வை நாளதில்
ஊதிரவிபோ லுருக்கி வருமெடும்
சோதித் திடைபரி சூதமுஞ் சொர்ணமும்
கூட்டி யுருக்கிக் கொடுத்திட லோகத்தில்
ஊட்டி மாற்றே முருக்கிப் பசும்பொனுற்
சத்தெட்டுக் கொருபரி தானதிற் சேர்த்து
உற்றே எடையினி லூட்டி யுருக்கிட்டு
இடைபத்தி விட்டு அரைகுற நீரினில்
அடைகுப்பி தன்னி லதைவாலு கைவைத்து
தொண்ணூறு நாழிகை தோன்ற வெரிமுத்தீ
எண்ணேறு குப்பி யெடுத்தவை பார்த்திடில்
பூரணச் சந்திரன் போலந்தக் குப்பியில்
காரணமாகக் கனிந்துசிந் தூரமாம்
படைத்திட் டமுழி காணஞ்செய் தேசிமிழ்
அடைத்திதைப் பூசித் தனுபானத் தேயிட
உடனே பசிதீ பனமுமாம் பாலனம்
திடமுட னுண்ணச் செயிக்குமிரைப் போதில்
தீபனங் கோடி செலுத்தச் செயித்திடும்
மாமோக மங்கையர் மால்போற் சகஸ்திரம்
தாமே கிரீடிக்கத் தான்சுக் கிலவிர்த்தி
அனல்போ லாங்காய மழியா தொருநாளும்
கனலாகுங் கண்கள் கறுத்திடும் ரோமந்தான்
இலட்சத் தெழுபத்து மூன்று வியாதியும்
உச்சிதச் சிந்தூரந் தின்ன வொழிந்திடும்

சிவன்று னுமைக்கிந்த சிந்தூரஞ் சொன்னது
தவந்தா னருட்பெற்ற தபோதனர் கொண்டது
ஏகமாய்க் கொண்டிங் கிருந்தேன் சிவயோகம்
சிவயோக மிருந்தேன் பொதிய மலையுளே.

**கெந்தகக்கட்டு.**

பார்த்திடுஞ் செயகெந்தி சுத்தி யதுகேள்
நாற்றமீ ரெண்பல நற்கரி சாலைநீர்
எழுத்தாணிப் பூடும் வெண்ணொச்சி யெலிச்செவி
வலுத்த குமரிநீர் வகைக்கோர் சாமந்தா
னரைத்திடு †மாவின் பாலொரு பாண்டம்
வரைத்திடு மேல்வேடு கட்டி மருந்திட்டு
சட்டியான் மூடித் தானேம் புடமிடக்
கட்டியாய்ப் பாலிற் கரைந்தூரி நிற்கும்
எடுத்திட்டுப் பார்க்க இதுகாண் மகாசுத்தி
கொடுத்ததொரு சேரெடுத்துச் சுத்தித்த கெந்தி
கருந்தாதுக் கிண்ணி கட்டி யுள்ளிட்டு (யைக்
மருந்துகீழ் நெல்லி யரோசிக நீக்கியும்
கருக்கண் மனத்தோடு ‡ கருப்பூ மத்தைச்சா
றஞ்சுஞ் சுருக்கிட்ட தஞ்சுதரந் தீர்ந்தபின்
ஆமையோட் டுள்வைத் ததனில்வார் பன்றிநெய்
தாமே செயகெந்தி தானு மிதுபார்
சுத்தித்த கெந்தியிற் கூட்ட மயூரநெய்
இட்டிடு நாற்பணங் கண்டுவெல் லத்திடக்
குட்டம் பதினெட்டுங் குன்மங் குறைநோயும்
மண்டலத் துள்ளே வாங்குஞ் சயரோகம்
அஞ்சுவித காச மற்றிடும் வீக்கங்கள்
அஞ்செட்டு சன்னி யடங்காச் சூலையும்

† வெவ்வேரப் ‡ கருக்கா ணத்தொடு இவை எட்டுப்பிரதி

வாதமோ ரெண்பது மாபித்த நாற்பதும்
பேதமா ஐயம் பெலத்த விருபதும்
தீருமோர் மண்டலந் தின்றிடிச் சாபத்தியம்
தீரா வெகுநோய்க்குத் திங்களோ ராறுகொள்
பணவெடை யேற்றிப் பாரோர் வாரகனில்
குணமாகு நோயுங் கொடுஞ்சிவப் பாந்தனு
ஆண்டுதான் கொள்ள வதிற்காயஞ் சித்திபாம்
ஆண்டுமீ ராறுகொ ளகலு நரைதிரை
போகுமே நோய்கள் பூசரி கேசரி
யோகத்தி ஞலே யோடு மகாசித்தி
மங்கைய ரோடு மருவ வெகுவிர்த்தி
திங்கள் முகம்பசித் தீபன மெத்தவாம்
கோரக்கர் மூலியிற் கோண்டுளோர் நோய்கள்
வேரொக்கக் கெட்டு வினைகடந் தோடிடும்
சோதியுட் சோதி துரியத்துட் டோன்றிடும்
ஆதியு மந்தமு மில்லா னறைந்ததே.

**தாளகச் சிந்தூரம்.**

அரிதார நாற்பல மதினீற்று நீர்காடி
பெரிதான தண்ணீர் பெரும்பூசி ணிக்காய்நீர்
ஆப்பால் தயிரினி லாகு மகாசுத்தி
செர்ப்பா யப்பா சுருக்கொடு சாமம்
செலுத்திடு மாதுளம் பூச்சாறு மாட்டு
† சம்பீர நீருப்புச் சாறதாற் சுருக்கிட்டு
எடுத்தொரு சட்டியு ளிட்டப் பிரகம்
தடுத்ததிற் ருழதின் மேலுமப் பிரகம்
வைத்ததிற் பார மதில்வைத்து மாட்டுநீ
சற்றரி தார முருகும்பின் ருனெடு

† தாசானுப் பூச்சார்-என்பது எட்டுப்பிரதி.

பளபளத் தேசிவப் பாகிப் பலகைபோல்
தளதளப் பாய்மின்னித் தானேசிந் தூரமாம்
அடைத்துப் பரணி யனுபானந் தான்வெல்லம்
உடைத்த திரிகடு பலைசுக் கிஞ்சிநீர்
உள்ளிநீ ரிஞ்சிநீர் முருங்கையின் றேனீர்
கொள்ளப் பணவெடை கூட்டிதிற் சிந்தூரம்
காசபித் தஞ்சயஞ் சீதமா றற்சுரப்
பெரும்பாடு வாய்வு பெருமூச் சிளைப்பொடு
சன்னி தலைவலி தோடஞ் சுவாசமும்
உன்னிய நோய்க ளொழிந்து சுகமாகும்
லட்சுமி திருமுகத் திடுசிந் தூரமென்
றுச்சித மாய்ச்சிவப் பாகுமது பானம்
அங்கங் கறிந்திட வறும்வெகு நோய்கள்
தங்கக் கடமுனி தான் புகல் வித்தையே.

**தங்கமுதல் லோகங்கள் புடத்தில் சிந்தூரம்**

தங்கத் தெடையினிற் சாற்றிடு நறும்பூ
தொங்கும் பரத்தைப் பூச்சாறு விட்டரை
வில்லை பிடித்து ரவியி லுலர்த்திட்டுச்
செல்லு மிருபத்தொருபுடந் தீர்ந்தபின்
பத்த லிடையிட்டுப் பரத்தைசம் பீரநீர்
பத்தரைத் துப்புடம் பத்திட்டுப் பார்க்கவே
பவளம தாகும் பணவெடை யுட்கொள
கவளமாய் நயன ரோக நாசமாம்
மேக மிருபத் தொன்றும்வெகு மூத்ரமும்
போகும் விசித்திர நோய்க ளொளித்திடும்
இம்முறை யாக இரும்பி னரப்பொடி
அம்முறை யிட்டா லதுவும் பவளமாம்
வயிற்றி லெழுந்தநோய் வாங்கிடு லோகந்தான்
உயிர்ப்ப டுருக்கு மெழுகறை சிந்தூரம்

ஆகும் வெள்ளிய மதிகப் பருதியாம்
போகுமே மேகம் பொடிபட்டுப் பித்தம்போம்
காரீய நாகங் கடிதாந் தராவுடன்
பாரிற் குடவன் பவளப் பருதியாம்
உட்டண ரோக முந்நூற் றெட்டறும்
கெட்ட மலநீ ரடைப்புக் கிராணிபோம்
தாம்பிரந் தன்னைச் சமைத்திடி லிப்படி
ஓங்கிச் சிவந்தொளி சேர்சிந் தூரமாம்
எட்டோ டறுபத்து நால்வகைக் குன்மமும்
சுட்டோ டற்றுக் கடும்ரோக நாசமாம்.

## நவலோக சிந்தூரம்.

லோகங்க ளொன்பது மோர்நிறை யாய்க்கூட்டி
யேக வெடையினி தெடுத்தநறும் பூவும்
கூட்டிச் சம்பீர ரசமும் பருத்தியாம்
மாட்டும் புரசம் மாதளம் பூரசம்
கற்றாழைப் பூரசங் கஷாயந் திரிபலை
பொற்றலைத் தாமரை பூவினீ ரிவைகளில்
ஆட்டிடு வெவ்வே றரைத்துப் புடமிடக்
கூட்டோடவ் வொன்பதுங் கொடிய பவளமாம்
வக்காவிடில் பத்தல் சேர்த்தரைத் திட்டு
தவத்தார் புடமிடத் தானே சிவப்பாம்
அனுபான மங்கங் கறிந்திடக் கோடி
தனிசேர் வியாதி சகலமு மொழிந்திடும்
மகவுக்குச் சொல்லா மகத்தாந் துறையிது
செகமுற் றுறவோர் தெளிந்துகொள் வீரே.

## திரிவங்க சிந்தூரம்,

திரிவங்க மூன்று வராகன் கரண்டிக்குள்
உருகிட வொன்றாகக் கூட்டி யுருகையில்

வெண்டா மரைக்கூற் றிடுகவொன் றதனில்
கிண்டப் பொடியாந்தீ நீர்வழ லைபூரம்
வீரப்ப னென்றிட்டு வெண்கரு வாலாட்டி
சீர்பெறும் வில்லை திடமாய்ப் பிடித்திட்டுப்
புடம்போட்டு நீயரை புன்வரை நாற்றம்
அடர்ந்தண்ட நீர்விட் டரைத்திட்டு வில்லைசெய்
ரவியி லுலர்த்திப் புத்தோட்டிற் புடமிடத்
தவநேர் சிந்தூரஞ் சசிநேர் நிறமாம்
ஆனந்த சிந்தூர மானகுரு நாமம்
தானென்று நாவில் மாட்சிகந் தனிலப்பி
வாட்டிப் புடத்தினின் வைக்கமதி யாகும்
காட்டியிச் சிந்தூரங் கானென்று நாற்பரிச்
செம்பினிற் பூசிப் புடமது தானிடப்
பூரணச் சந்திரன் போலேசிந் தூரமாம்
அடைத்துப் பரணியி லப்பால் வகைகேள்
சிவப்பின்மார்ச் சாலநீர் பழநீர் பரத்தம்பூச்
சிவப்பி நிறத்துட் சுருக்கிடோர் சாமம்
எடுத்துப் பழஞ்சிப் பினிலிரண் டுப்பு
தொடுத்திடு காரியோர் சாரிவெண் கண்டர்
பண்ணையுங் கூட்டிப் பொடித்துமுப் பங்கிட்டு
யெண்ணிக் கரண்டி யிவைவொரு பங்கு
முருக்கிச் சிவப்பினி லூட்டிடு முப்பங்கு
முருக்கியதி லேற்றுற வாட்டித் தீர்ந்தபின்
வீரம் வழலைநீர் வேதிசிந் தூரமாம்
ஈர வகைசிவப் பிட்டிலகு வாட்டு
தாம்பிரச் சிப்பிச் சாரம் வகைநான்கு
வெங்கொடு கண்ட ரதிலொன்று கூட்டி
அரைத்தப்பி வாட்டி மழுங்கிடத் தானரைத்து
வரைத்த மணலினின் மாட்டிப் புடமிடக்

கட்டிச் சிவந்து களங்கற்ற சோதியாம்
தொட்ட சிந்தூர மிதிலொன்று நாற்பது
சிந்தூரங் கூட்டிப் பொடித்தடைத் தேபணம்
சிந்தூரம் வெள்ளியி லீந்தி டாறரை
மாற்றது பொன்னுய் மருவிப் பிறந்திடும்
பார்த்திடு குன்றிப் பருகி டநுபானம்
திப்பிலி சூரணத் திட்டிடத் தேனுடன்
குத்தல் பதினெண் கொடுஞ்சூலை தாமெட்டும்
குன்மமீ ரொன்பதுங் கொடியசயங் காசம்
ஏர்பதி னெட்டு மிளைப்பு மிருபதோ
டிருமன்முந் நான்கு மெலிகடி யீரெட்டும்
பொருமலையத்தாற் பிடிவாத நாற்பதும்
போகுமே லாதிப் பொடியிற் பருகிட
வேகஞ்சீ வெட்டை வெப்புசுர மேகம்
இருபத் தொன்றுந் தசநான்கு பித்தமும்
ஒருமித்த கோப மொருநூற் றெட்டாறும்
வெல்லத் திடவே வெதுப்பியிரு பத்துநால்
சொல்லிற் சுரநோய் துருசற் றொழிந்திடும்
அகலிப் பெருநூ லநுபானத் தேயிடச்
சகல வியாதியுந் தரணிவிட் டோடிடும்
தேகங்கண் டுணர்ந்து பொருந்து மநுபானம்
தேகங் கண்டிடாற் சிலைமதி யாந்தனு
கமல முகநகம் வச்சிரங் காயம்
கம்ம லொளியோர் கதிர்தான் றோன்றிடும்
பற்க ளிருகிடும் பகலுடுத் தோன்றும்
சொற்கலை யாமன் றுஞ்சாது தோன்றிடும்
ஆதி சிவனிவ னுமிச் சிந்தூரம்
பத்திய நன்றாய்ப் பழம்பா லனங்கொடு
சுற்றிக் குகைக்குட் சுழல்கால் ரவியின்றி

அஷ்டாங்க யோக மருந்தி யநுதினம்
நிஷ்டைகண் முடியா நிர்மூடர் தங்கள்
காயங் கனலாங் கால காலனும்
மூர்த்திசேர் மாயனும் வேத மூர்த்தியும்
மிருகமா நினைந்து நீங்குவர் விரைந்து
மருக வவன்றன் மாளாத நோய்கொளும்
எங்குளச் சித்த ரெல்லாங் கொளும்வகை
தங்கசந் திரோதய வகைசாற் றுதுமே.

**சுவர்ணச் சந்திரோதயம்.**

ஒன்றுபொரி ரண்டு சாரந் திரிநீலம்
நின்றசிறு சீன மைந்துவெடி யாறு
வாரிக் குருவியேழ் பண்ணைவகை யெட்டு
பூரம் லவணம் புகலிற்பன்-ஞென்பான்
ஒன்பானு வெண்மால் வானிலரைத் தொன்றில்
பண்பாம் ரவியிற் படகட்டு மவ்வெடை
அருசுக் குருவா லரைத்துப யத்தினில்
வரிசைத் தசமொன்று மாட்டி யதிற்சீனம்
கடிப்புவெடி மூன்றுங் கடியசெ நீர்விட்டுத்
துடிப்புற வாட்டு சரத்துளி லகுபுடம்
இடவெண் மாவிரு செந்நீர்விட் டாட்டி
மடமத்த சந்திரி தன்னிலந்த மாட்டி
வாட்டி யுலர்த்தி யரைமூன் றுஞ் செந்நீரால்
ஊட்டி லகுபுட முற்று லவைகட்டும்
இவ்வெடை வெண்மா விட்டபடி நூலினில்
அவ்வை ரவியத்து ளாட்டிடக் கட்டும்
நாலிடை வெண்மா னலமத்தி வையைந்தில்
பாலித்து வாட்டிப் பதமா யதுவெடுத்
தப்பி யெடுத்தவை யிரண்டுஞ்செந் நீரில்

செப்பரைத் தப்பித் திரவாட்ட சாமம்
ஐந்தோடு வெண்மா லரைரவி தன்னால்
முந்திய வாறினின் மூட்டிப் புடமிடக்
கட்டுமெடை நீலி நீற்றிரவி யாலரை
ஒட்டிய வேழினு ளூட்டி ரவியில்லை
சாமெடை வெண்மால் சலாவி விட்டரை
வேமெட்டிற் பூசி விரவி ரவியில்லை
திக்குச் செயமாந் திருவெட்டி நேர்வெண்மால்
வைக்க ரவியநான் மாட்டியவ் வொன்பதில்
வாட்டி முறையாய் மரிக்க மணியதாம்
கூட்டுமுன் னெட்டிவை யொன்பதும் வேறவை
காரியந் தங்க ரவிசேர் சமனதாய்
வீர மாட்சியம் பரியவ் வெடையிடு
உருகிப் பொடிக்க வுயர்ந்த குருவாம்
பெருக்கு மினியரை யீரரை வாசுகி
கண்டவெடை விற்பனன் கல்வத் துப்பொடி
விண்ட சலம்வெந் நீரா யோடும்
செயமொன்றி நீரால் நாலோர் குருப்பூசி
பயமொன்றி வாட்டப் பருதிப் பவளமாம்
திரிசவைந் தாறு திரமிப் படிவாட்ட
அரிய சிந்தூர மருேணு தயமாம்
உபயமே ழெட்டுக்கு மூட்டெடை யொன்பது
அபய மிதுநா லொன்றும் பரிக்குரு
இட்டார் நீரி விழுத்தரை வெவ்வேறு
தொட்டா லகுபுடஞ் சூட்டச் சிவந்திடும்
வெவ்வேறு ரவிமதி மேலிடச் சொர்ணமாம்
அவ்வே றிவையொன் பதுமிடச் சொர்ணமாம்
ஒன்றுறு திப்பிலி சூரணத் துப்பினில்
தின்றிட வெட்டைச் சிரரோகந் தண்டினில்

நோய்கல் லடைப்புச் சதையடை நீரடை
வாயுவெண் பித்தம் வளர்மூலக் கிராணி
போமநு பானங்கள் போற்றி யறிந்துண்ண
வேமீர் சகத்தீர் வியாதிக ளூசம்
மூன்றுநீ யுண்டால் முழுதறுங் குன்மந்தான்
தோன்றிடுந் தீபனஞ் சுகவிர்த்தி போகமாம்
உபயத்தில் வாய்வு வயிற்றுநோ யோடிடும்
அபய சதுவி லனந்தவாய் வெப்பறும்
ஐந்தி லடங்கா தளவற்ற வீரியம்
செந்திரு மேனி சிலைவச் சிரமாம்
ஆறி லரோசிக மாகிய பித்த நோய்
ஏறு முதரநோ யிரெட்டு மேயறும்
ஏழுள சத்தி வெடிப்பு சுரமறும்
பாழிற் கிராணி படர்வாயு நாசமாம்
எட்டு வெகுவிக்க லெடுப்பு வரோசிகம்
துட்டப் பயித்தியஞ் சோர்செரி யாக்குணம்
போகுமவ் வொன்பதிற் போகாத குட்டம்போம்
மேக ரணசூலை வியாதிபோம் லட்சம்
ஒன்பதுங் கூட்டி யோர்நிறை சேர்த்து
தின்றிட நோய்கள் சேர்நாற் சகத்தீர்
நானூற்று நாற்பத்தெண் ணேயு மிதிலறும்
பானூற் றநுபானம் பார்த்திதற்குச் சொற்றொகை
லட்சநூற் பாவகை செய்யுட் டோன்றிடும்
சின்னூல தாகுஞ் சிவாநந்திக் கிம்முறை
முன்னோ ருரைதான் மொழிந்ததிச் சூத்திரம்
அஸ்தநூ லாகு மாதி மகாதொழில்
வஸ்துசேர் வித்தை மகாவஸ்து வித்தை
நித்தன் குருமுனி நிர்மலன் றனுரை
அத்த னுரைதா னருண்மிகு முறையே.

**சத்துச் சிந்தூரம்.**

தங்கத் தெடையண்ட சத்திட் டுருக்கியே
வங்கத் திடைபூ நாகச் சத்து
மாட்டு கார நாலதின் மாட்சி
ஆட்டின் றன்சத் திடுநாகத் தெடையே
நாற்ற மாநற் சத்துருக் கிட்டு
செம்பிற் கற்பூர சிலை சத்தெடை
மாட்டுநேரம் புருக்கி யிந்த்ரகோ பத்தெடை
நாட்டுவெள் ளிய மப்பிரக சத்தும்
சரிசே ரெண்ணூசிக் காந்தத் தெடையே
நாற்றநற் சத்து சேர்க்கப் பரியும்
இரும்பை யுருக்கி யெளிதாய் மயூரஞ்சேர்
விரும்பியொன் பானும் வெவ்வே றுருக்கிட்டு
வன்னியாம் பாலை ரசம்வாங்கி யீரெட்டு
உன்னியவ் வொன்பதி லூட்டி யுருக்கிடு
நவிலெலு மிச்சங் கனியிற் றமரிட்டு
நவமணி யத்துள்வை நாண்மூன்று சென்றே
ஒன்பது மொன்று யுருட்டி யுறவுசெய்
பின்புமீங் கானிடை பன்னிடு சற்றுநாள்
பார்க்கத் தயிரா மாரச மதில்வெண்
கண்டர்வழ லைபொறிக் காரங்கற் பூரம்
இணங்கநவச் சாரம் பற்பம் வகைக்கோர்
கழஞ்செடை மேற்றாவ லோகமுஞ் சத்தும்
வகைக்கோர் கழஞ்ச தாக வூட்டி
பாகம தாகிப் படர்தர நின்று
ஆகுமோர் பட்சத் தடங்காத பாலையாம்
இனிநாலுக் கொன்று யிட்டிடா டகத்தினைத்
தனியே கிழிகட்டித் தப்பாத டொளையுட்
பாண்ட முதிர்ந்த பழங்காடி விட்டதில்

தாண்டு மிதிபாகற் சாறுகாக் கணமீடு
பூநாகந் தேங்கா யளவிதிற் போட்டு
மானே யடுப்பினில் வைத்தெரிக் கப்பரி
உண்ணு ரசந்தா னுருகிக் கொதிக்கையில்
உண்ணாந் தெடைபரி யூட்டி யெரித்திடத்
தீபன மாகுஞ் செலுத்து மெடைபரி
ஆவென வுண்ணு மவையொன்றுக் கேதசம்
நாட்டிடத் தங்க ரவிதான் ரசமாகும்
கூட்டினி லோகங் கொடுத்துப் பரிசிக்கத்
தங்கம தாகுந் தனியந்த பாலைக்குத்
தங்கநீ றிட்டுத் தனியே செய்து
உருக்கியிதை யெட்டுக் கொன்றிடு செம்பரி
பெருக்க விதனெடை கெந்திம ணேசிலே
கால்முன் னுகக் கடுஞ்சலத் தாட்டி
மால்கடி தொண்ணூறு மாட்டு திரியனல்
பூரணச் சந்திரன் போற்சிவப் பேறும்
ஆரண நூலி லடங்கா தநுபானம்
நவலோகத் தாயிரத் தொன்றிடத் தங்கமாம்
சிவனேரி வைபணந் தின்றிடச் சித்தியாம்
காயமுங் கல்லாங் கடுங்கோடி பானு
சோதி யொளியோகஞ் செகமணு வாய்விடும்
சித்தர் கணத்துள் செறியோ முட்கொண்டு
பத்திய தீயும் பவனமுங் காலன்றி
காமமு வேடணை மற்றுள தகன்று
சேமமா யோகத் திருந்திடச் சித்தியாம்
பூசரி யோகம் பொருந்துங் கவனந்தான்
கேசரி யண்டச மீரெண் போற்செலும்
யோசனை கோடி நொடியிலடி பாறும்
தேசுயர் தேகந் தெரிசிக்கச் சொர்ணமாம்

வாசுகி நீரினின் மறத்தியிற் சிந்தூரம்
பூசச் சரக்குகள் பூரணச்சந் திரனும்
இந்த வகைத்தொழி லாகமுறை முற்றும்
எந்தை யகத்தீச னெனக்குரை வித்தையே.

**பஞ்சசூதம்.**

இனியது சுத்தி யெடுத்திடு ரண்டேகால்
தனிய சமரசம் தாக்கிடு நாலரை
சுத்தித்த பூரஞ் சூட்டி டஞ்சரை
பத்திசேர் பூசத்து பாச்சிடொன் றேகால்
புண்ணிய சிந்தூரம் பூட்டிடு மூன்றரை
நண்ணிய முலைப்பால் நாட்டி யரைத்திடு
ஈரெட்டு சாம மிதமா யரைத்தபின்
சேர வழித்துத் திறமா யுலர்த்ததில்
பணவெடை யுட்கொளப் பனைவெல்லந் தனிலே
தினமிரு போது தின்று வருகையில்
தீரும் வியாதி திரமா யறிந்திடு
மாறுவெடி மேகம் மாறு திமிர்ப்புண்கள்
குஷ்டங் கிரந்தி குறைநோ யுடன்புண்கள்
அஷ்டவித சன்னி யாறுத புண்ரணம்
போகுமே குன்மம் புகல்சுவாச காசமும்
ஆகுமே வாத மடங்காத நோயறும்
சூலைபதி னெட்டு சூழ்விப் புருதியும்
பாலைபுண் ரணமு மருவி யொழிந்திடும்
பட்ச வாதம் பாரிச மூர்ச்சையும்
மட்சலப் புத்து மோர்துடை வாழையும்
உன்னக் கிரந்தியிற் கண்டிடு ரோகமும்
முன்னுற்ற தொண்டையின் முளைத்தெழுந் தாரு
வீரிய விர்த்தி வெருகளை மேனியாம் [டன்

காரனில் வந்த பலரண மானதும்
வேரொடு கெட்டு வினைகளைந் தோடிடும்
சீரோத்த சின்னா விதின்பொருண் முந்நூற்றில்
திறமா யுரைக்குந் தென்பொதிகை வாழ்முனி
வாறு ருரைத்த வருள்பஞ்ச சூதமே.

### சிறுசந்தனாதித் தைலம்.

சிறுகீரை வேர்வெட்டி வேர்மூத்தக் காசகில்
பரித்திரி பலைதண்ணீர் மிட்டான் கிழங்கேலம்
மதுரநன் னாரிவேர் நெய்தல் கிழங்கொடு
அதிருங் கிராம்பு குரும்பைச் சடாமாஞ்சில்
கஸ்தூரி மஞ்சள் கோஷ்டமு மஞ்சள்
முத்தேவ தாரந் தகாமு னகப்பூ
குங்குமப் பூசந் தனஞ்சாதி பத்திரி
மங்குபுலித் துடைக்கியு மம்முறை போலரைத்
தோர்படி யெண்ணெய்க்குச் சாறிரு பதுகரைத்
கரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடிக்கையில் [துக்
நல்ல கற்பூரம் புழுகோர் கழஞ்செடை
எல்லையோர் சட்டியி லிட்டே யிறுத்திடு
தயிலங் குபீரென்று தானே வாசித்திடும்
மயிரிற் றேய்த்து முழுகிடத் தீருநோய்
பலித்திடும் வாத மையவித் தத்தின்
வலித்திடு மந்தத் தலையில் வலிதலை
மயிரு முதிருதல் வாங்குஞ் சிவன்மொழி
உயர்சந்த னாதித் தயிலத்தி னுண்மையே.

### சந்தனாதித் தைலம்.

மாமறை யுரைசெயும் வகைதயிலமுறை
வாமுநி வடகலை தென்கலை மொழிவர்
சந்தன மதுர நன்னாரி கஸ்தூரி

கந்தமா முத்தக் காசுபுன் னைவிரை
மாஞ்சி நெய்தயிர் கிழங்குவிலா மிச்சம்வேர்
கற்சாமை குங்குமப் பட்டைப்பூ வாகுதல்
தக்கோலம் ரோகணி சாதிக்கா யாகும்
சண்பக மொட்டில் வங்கத்தோல் கோஷ்டமும்
தண்மலர் வெட்டிவேர் தகரம் வளைக்கஞ்சம்
மஞ்ச ளடவிகச் சோலமு மேலமும்
மிஞ்சாம லோர்கழஞ் சிருபத்து நாலையும்
அரைத்தொரு படியெண்ணெ யதிற்கரைத் திட்டு
நிறைத்திரு படியிள நீர்விட்டுக் காயவை
வெந்தே தேய்த்து முழுகிடத் தீருநோய்
அந்தறுங் கண்ணோய் செவிநோயும் பீனிசம்
தீரு மயிரதுக் காதகில் சந்த
ஞதித் தைலத் தடங்காச் சுகமே.

## அசுவகந்தாதித் தைலம்.

முத்து மமுக்கி வேர்குருந் தொட்டிவேர்
பத்திரண் டஞ்சு வகைகண் டிடித்திடு
நாலுமரக் கானீர் நாழி யாய்க்காய
மேலும் வடித்து மெழுகாக் குப்பலம்
பத்துநீர் வள்ளிக் கிழங்க திருபது
இத்தையம் பலமாட் கிழங்குநன் னரி
பலபூமி யின்சர்க் கரையின் கிழங்கும்
பலதச மோர்தசங் கூவிள மிதனுட்
டசம்பல நான்கு படிநீரிற் காய
நாழிநீர் முன்கஷா யத்தொடு விட்டு
நல்லெண்ணய் நாழி தயிர்வடி கொண்டநீர்
மெல்லவீ ரெட்டு முதிர்பூமிச் சர்க்கரை
கிழங்குநன் னரிவே ரரைத்துக் கலக்கிடு

பின்பதிற் கலக்க மறத்தைமஞ் சிட்டிபு
முன்றேவ தார திப்பிலி கோஷ்டமும்
சந்தனக் கட்டை விலாமிச்சஞ் சாயவேர்
வைத்தோர் பலமிவை யாக வெடுத்து
மாட்டுந்தீ நீர்வடி கொண்டநீர் தன்னிலே
கூட்டி யரைத்துமுன் கூட்டிய யாவும்
கண்டநல் லெண்ணெய் கஷாயத்திற் கூட்டியே
அடுப்பில்வைத் தேயெரி யாறும ஞன்குநாள்
தொடுத்திரவு பகலு மாறுமற் றீயிடு
ஆறும வித்தீ காய்ச்சனல் மாறினல்
வேறுய்ப் பதங்கெடும் மேவி யறிந்தெரி
மெழுகு பதத்தில் வடி த்துமா காணிகொள்
மேலெலாம் பூசிச் சீக்காயால் மாற்றி
வாங்கிக் கண்ரோக மாடியில் மண்டலம்
ஒங்குநோய் குரைநோய் மண்டல மேகொளத்
தீரும் வியாதி தாகமெடுக் கின்ற
நீரிழிவு சயமீளை யிருமற் காசம்
வற்று முடலிற் காச்சனு லாமுறை
யுற்ற சுரமொரு நாட்கொரு நாட்டான்
உடலிளைப் பக்கினி மந்த மோடிடும்
இடுபத்திய முருங்கைக் காய்பசு வின்பால்
கொடுதயிர் மோர்நெய் மேகித் தயிர்மோர்
நெய்யா கும்வெள் ளாட்டுக் கண்டம்
கச்சல் வாழைக் காயாகு நல்ல
உப்புக ளாகா திடுநீ பத்தியம்
நிசமாய்த் தைல மெண்ணேயு மகற்றிடும்
அசுவகெந் தாதி யதிசுக மாகுமே.

### அசுவகந்த ஏலாதித் தைலம்.

அமுக்குராக் கொம்பரக்குச் சித்தா முட்டிவேர்
குமித்த வகைபதி னாற்பலங் கூட்டியே
பதக்குநீர் விட்டு நாழியாய்க் காய்ச்சிட்
டதறவெண் ணெய்முன் னாழி யாத்தயிர் நீர்வடி
குறுணிநா னாழியிற் கூட்டும்வகை கற்கம்
சிற்ற ரத்தையுஞ் சிற்று முட்டிவேர்
கோஷ்ட மமுக்குரா சந்தனம் ரோகணி
ஊட்டு சதகுப்பை முந்திரி கைப்பழம்
கோரைக் கிழங்கு மறமஞ்சள் கூடவே
கூர்தேவ தாரமஞ் சிஷ்டி மதுரமும்
பெருங்குருவை திப்பிலி மூலம் விலாமிச்சம்
அரியநன் னாரிவே ராய்ச்சரி கூட்டி
அரைத்துக் கரைத்துவெம் பத்தி லிருத்ததை
வரைத்தீ சருவாங் கமுமாட் டியதை
மாற்றப் பெலனு முண்டாகுஞ் சுரமெலாம்
தாண்டு மிருமல் பொருமல் பித்தகாசம்
சுவாசம் போஞ்சய ரோகமெல் லாம்போம்
தாதுவர்த் தித்திடுந் தானதி வெட்டை
ஓதரு ரோகம் பறந்திடு மசுவ
கெந்தவே லாதித் தைலம் விளம்பிட
வந்த பொதிய மாமுனி வைப்பிதே
வெருகங் கிளச்சினை வெட்டிநன் றாய்ச்சீவி
உரிதண் டிலையுட னெலாந்துவைத் திட்டுக்
காடி பதக்கற லவ்விடை கூட்டியே
ஓடப் பிசைந்து நாலொன்றாய்க் காய்ந்தபின்
கஷாய மிறுத்திடு நாழிநல் லெண்ணெயும்
படாவுமுன் னாழியாய்ப் பாலு மதில்விட்டு
வெருகங் கிழங்கு நீர்கர்க்கஞ் சிறுதேக்கு

சுக்குத் திப்பிலி சாதிக்காய் தாரமும்
கோரைக் கிழங்குட னரைத்துவெந் தப்பதத்
துட்கொடு போத முடம்பிலும் பூசி
நசியமிடச் சீத சுரமுஞ் சன்னியும்
வசியம திட்டு வாங்கியோ டிடுமே.

## அஷ்ட சூரணம்.

காய நாலிரு சீரியீரறு கடியதிப்பிலி யெட்டொடே
ஓயும்வாத மிறுக்கி யைமதி யுப்பதை யிருமோதகம்
சுக்குதேனிரு நாளிலையுயர் சோம காயமோர் நாலையும்
மிக்கதட்டி வறுத்து வெண்மைய மாகமற்றத ஞற்கடை
மற்றவேழும்வறுத்ததைப்பொடி வஸ்திரகாய மிதிற்சரி
உற்றசீனி கலந்துபூனையி னுற்றடிப்பொடி யுள்ளிடப்
பலிதொடுத்தகடுப்பிடுப்பிரு கால்கரங்கள்கறுப்பொடே
வலிவயிற்றுள நோய்பயித்திய வாயுவொன்பது மேய
றும்,வட்டெரிப்பொடுசூலைவாயுகடூருமோர்தசநாளிலே
அஷ்டசூரண மோடு தாம்பிர பற்பமோ டநுபானமே.

## திராக்ஷாதி சூரணம்.

முந்திரி கைக்கனி பேரீச் சங்கனி
முத்தக் காசொடி ரேணுகமும்
சந்தன நெற்பொரி காட்டேரு மைப்பால்
தனியே லமுநற் சீரகமும்
முந்திய வெட்டிவேர் திரிகடு பலைவேர்
முட்டிவேர் கோஷ்டமு மதுரமுடன்
சிற்று முட்டிவேர் சீந்தில் சர்க்கரை
சேருநி லக்குமிழ் வேருடனே
மல்லி நெருஞ்சிவேர் விலா மிச்சமர
மஞ்சளு நெய்தலின் வேருடனே

நல்ல கிராம்பொடு கஸ்தூரி மஞ்சளு
நற்குங் குமநன் மலருடனே
காணு மடவிய கச்சோ லத்துடன்
கஞ்சத் தின்வளை யம்முடனே
பூணு மிவைசரி கூட்டிப் பொடிநேர்
போடிதில் நற்சர்க் கரையுடனே
தாணிக் காயள வுண்டை யுருட்டியுட்
டாக்கி டுந்தனி மதுவிடவே
பூணு மிளைப்பு முழலையு மிருமல்
பொருமலொடு காசச் சுவாசமுடனே
குன்மமுந் தாது சயப்பிர மேகம்
கொடிய வயிற்றி னுண்ணோய் வலியும்
சோரு மரோசிய வாந்தி பயித்திய
பாண்டு சுரத்தொடு சூழ்சயமும்
நாடிடு சந்நிதி யக்க மயக்கமும்
நாற்பது பித்தமு நளிரெரிவும்
ஓடிடும் நோய்கள் திராட்சா திப்பொடி
யுண்டிட வென்றனன் மாமுநியே.

## சுகபேதிச் சூரணம்.

### வேறு.

சீரிதி லவண மோத கத்திெனாடு
திப்பிலி சுக்குவிடை போக்கியே
பாரி னறகடுவும் ரெண்டு திரிதிரியும்
நாலு மைந்துபதி லைந்தொடே
ஆக வேரவியி லுலர்த்தி தைப்பொடிய
தாக்கி வெருகடி வெநீரிட

ஏகு மூல முளை வாயு பித்தமதி
லேயெ ழுந்தகொடு வாயுவுடன்
போகு மேசட சவுக்கிய மானசுக
பேதியானதெ சாதாரியே.

## அசுவகெந்த ஏலாதி சூரணம்.

### வேறு

கிராம்புசிறு நாகப்பூ வோடேல மிளகு
கெடியான திப்பலியும் வேர்கொம்பி னோடு
திராம சுவகெந்த முடனேன் றிரண்டு
செய்நாலு மிருநாலு நான்குநா லுண்ணா
எட்டெட்டு மேயுலர்த்தி யிளவறுப் பாய்பொடி
ஈரெண் சீனி யிட்டிட விதற்கு
அஷ்டகுன் மம்பீலி யுங்குத்து வாய்வு
ஆமேக வெட்டைபிர மியம்விக்கல் பாண்டு
இறைப்பு மிளைப்பொடு சயரோகம் மனவெரிவு
இடைகாங் கால்சிரம் வரட்சி யொடுவீயு
மெய்ப்பெருக வெழுத்தல் பிடுங்கிட்டோடுஞ்சிலே
விட்டோடு மேயசுவ கெந்தாதி யினிலே (த்மம்
அசுவகெந்த மமுதசஞ் சீவிகெந்தம்
மல்லியின் வெந்தபம் நெப்தலி னுடைய
கெந்தங் குமுத கஸ்தூரி கெந்தம்
செயகெந் தங்கொடி தானகிட் டமுடன்
கார்போகி யரிசி குட்டப்பாலை யரிசி
சிறுபுன்னை யரிசியோ டேவிளை யரிசி
நன்னாரி வேருக் கிராக்ஷம் நெற்பொரி
கூகை நீறுமேற் கலைகொம் பாயிற்
காந்த நற்கல் கிராமை யோடு
நற்பவள மோடு மல்லிதிற மான

வயிர முள்ள திப்பிலிக ளுடனே
காரே லமுந் திரிகையி னற்கனி
பேரீச் சங்கனி வெட்டிவேர் விலாமிச்சவேர்
சந்தமுங் கிராம்பொடு கோரோ சனையும்
மிளகுவேர்க் கொம்பொடு சாதிக்காயும்
மேற்பத்திரி கூட்டி நன்றாக வைத்ததிற்
காய மிட்டுக் கொளச்சிர மதனில்
வெருகடி கொள்ளவு முடனே யாடில்
பூரில் பித்தத் தியக்க மயக்கம்
அஸ்திசுரம் வெட்டை காமாலை யும்விஞ்சி
அண்டவாய் வோடு கைகால்கண் ணெரிவு
அதிவாந்தி கிறுகிறுப் பொடுவாய்வு குன்மம்
தொண்டையுட் புண்வலி தோஷமோ ரேழும்
சுரமி வையொழிந் துடனே சுகமாம்
செயரசம் பாத ரசஞ் சிந்தூரமும்
திருவான தங்கரச சிந்தூரம் வங்கம்
நயமாமப் பிரகரச நவரத்தின பர்பம்
நவலோக நீறுட னன்றுறத் தானே
அநுபான மங்கங் கறிந்து கொளவே
அறுமிதிற் சகல நோய்க ளடிபடும்
தொனியான மாவசுவ கெந்தவே லாதிச்
சூரண மகஸ்திய மாமுனி சொன்னதே.

**வேறு.**

சுண்டைவற் றல்கறி நிம்பப் பத்திரி
சுவைக்கு மாங்கனி விளவின் கனியுமண்
சொல்லுமோ தகமு நெல்லிதா துக்கனி
தோலும் வெந்தயமோ டேழுமே.

விண்டு ரைத்தபடி யொன்று பற்றிட
வெதுப்பி யேயிள வறுப்பதாய்
மிருது வாகவிடி வடிகொ ளீதுபொடி
வெருகடி யளவு தயிரிலே
கொண்டிடப் பொருமல் பந்த பிக் கிரைவு
குமுறிடி றிடு கழிச்சலும்
கோல மூலமதி சார மோடுமெழு
கிராணி மூலமு மடாதுகை
கண்டதித் தனையும் வென்றிபுத் தியுள
பண்டிதத் தொழிலை நம்புவீர்
கருணை மாமரித முதவி கூருவரை
கைம்மருந் தெனவே செப்புமே.

**சங்கத் திராவகம்.**

**வேறு.**

வெடிமதி கூர்மைசாரம் விதமன பேதிநீலி
படிகிப்பூ நாதநீறு பலபொரி காரமீதோ
டதுதிரி வுபயமேக மபப்பரை காலதோர்கால்
பதவரை காலமூவே கமரைபோ டிடுவதாக
அடைகட மறையதாக வதில்வளி கடமுமேல்வை
இடைவழி தயிலமாக விவைவரு மேபொலாறு
காமது நீர்கள்சேருந் தனியினி லோகதாது
உரமது நீறதாகு முபாச நீரதாகும்
மார்வலி வாயுகுன்மம் வலியறு மேகசங்க
நீரித னேதனேகன் மாதவ ஞேதுமாறே.

### மாந்த எண்ணெய்.

### வேறு.

திரமான வெள்ளாட்டு னீர்மோரு நாழியும்
திருவிளக் கெண்ணெய்நாழி
திருகள்ளி யோர்பலமு மிண்டங் கொழுந்துபிடி
செண்பகப் பூமதாரமும்
உரமான சாதிக்காய் பத்திரி லவங்கமும்
ஓடுபூடு வெள்ளுள்ளியும்
ஓதுமிரு சீரகம் வசம்பிலா மிச்சமும்
உறவெட்டி நன்னாரியும்
சிறுநாக முத்தமொடு பூலாக் கிழங்குடன்
சேருலவு கோரோசனை
சேர்கடுகு ரோகணிக் கோஷ்டமுட னேபச்சை
செயநாக ரஞ்சனமதாய்ச்
சரமாக வேயரைக் காசெடை யரைத்திட்டு
தணலிட்டு பதமாக்கியே
தையலே பாலெண்ணெ யுண்டிடக் கணமாந்தை
தரணிவிட் டோடு மிதுவே.

தேரையர்கரிசலை - ௩௱ - முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 25 | மத்தங்காயரைத் தெழிற் | மத்தங்கா யாரை திராப் |
| 9 | 9 | காரமோர் | சாமமோர் |
| ,, | 13 | ,, | ,, |
| ,, | 15 | மாடி | மாகி |
| ,, | 16 | தேனி னீருடல் | தேனினிஞ்சி நீருடன் |
| 10 | 12 | காதின் | கூறு |
| ,, | 27 | வேகரி தானுற வே | வேகரி மீது வர |
| 11 | 4 | வாரதி | வாமதி |
| ,, | 6 | சீறியெண் | சீறிவெண் |
| ,, | 7 | ணேயிட | ணெயிட |
| ,, | 15 | மாற | மாரச |
| ,, | 23 | சேராம் | சோரம் |
| ,, | 26 | சோரினில் | சோரனில் |
| 12 | 21 | மதுபா டைமணஞ் | மறுபாண் டமண் |
| ,, | 28 | மிதரச | பாதரச |
| 13 | 2 | யங்குள்விட் | யங்குளவிட் |
| 14 | 19 | யரப்பொடு | யாப்பொடி |
| ,, | 24 | மாமே தயிரில் | மானே றிவை |
| 15 | 9 | ரிப்பொடி | ரிப்பொடியி |
| ,, | 10 | விட்டிட மும்பல் | விட்டிட முப்பல் |
| 16 | 11 | னிரமுட | விதமுட |
| ,, | 15 | சரிகினுள் | சருகினுள் |
| ,, | 16 | தொந்தநா லேற்றிடு | தொந்தநூ றேற்றிடு |
| 17 | 13 | மூடியிற் | மூடியீர் |
| ,, | 14 | கணிவித்தின் | கனிவித்தின் |
| ,, | 17 | ஆங்கூர | ஆங்குற |
| 18 | 5 | முண்டாங்கல் | முண்டாம்நல் |
| ,, | 10 | சூட்டிபல | சூட்டுபல |
| ,, | 11 | பத்துசேர் | பத்திசேர் |

| | | | |
|---|---|---|---|
| 19 | 16 | கிரங்களுஞ் | நிரங்களுஞ் |
| ,, | 18 | வில்லை செய்தழ | வில்லைசெய் நிழலி |
| ,, | 22 | லைசூ | சூலை |
| ,, | ,, | விரிசனிட | விரியனிட |
| ,, | 24 | புடையுநற் | புடையநற் |
| ,, | 26 | டிடும்படைகொளற்ப | டிடும்படி கொள்பற்ப |
| 20 | 2 | நீரதால் | நீரதாம் |
| 21 | 4 | புளயப்பரணி | புளியம்பரணி |
| 22 | 2 | பாளை யண்ட | பால் அண்ட |
| ,, | 3 | தரமூர | தரமூத |
| ,, | ,, | பீரச் | பிரச் |
| ,, | 22 | தற்பன | துற்பன |
| ,, | 26 | நீறிறப் | நீரிற் |
| 23 | 2 | சவுக்கினைங் | சவுக்கினைத் |
| ,, | 4 | வெண்கத்தம் | வெண்தந்தம் |
| ,, | 5 | சுன்னங்கள் | சுன்னங்கேள் |
| ,, | 6 | னங்களும் | ணங்களும் |
| ,, | 7 | தடப்படு | திடப்படு |
| ,, | 10 | பீரா | பீரா |
| ,, | 16 | சேரச் | சேரைச் |
| ,, | 20 | நாபியும் | நாபிரசஞ் |
| 24 | 30 | மனையினுள் | மணலினுள் |
| 25 | 3 | மணம்புடம் | மணற்புடம் |
| ,, | 19 | காய்ந்த | காய்ந்தால் |
| ,, | 31 | சொன்ன | சொர்ன |
| 26 | 11 | கனவிட்டுத் | கண்விட்டுத் |
| ,, | 13 | சாரமொன்றரை | சாரச மொன்றரை |
| ,, | 22 | போட்டண | போட்டண்ட |
| ,, | 28 | லளியநு | வழியநு |
| 27 | 12 | உருக்கிடும் போது | உருக்கிரும் பொடுரவி |
| ,, | 15 | வேப்பண்ட | வெப்பண்ட |
| ,, | 28 | வாரசுரா | வாரதா |

| | | | |
|---|---|---|---|
| 28 | 3 | நூற்பச்து | நூறுபத்து |
| ,, | 5 | கார்காரி | காரிசாரி |
| ,, | 26 | வரைகளைக் | வரைவளைக் |
| 29 | 5 | கடமதில் | கடமரை |
| ,, | 8 | பழத்தே | பளபளத்தே |
| 30 | 12 | முத்திடு முப்பது | முத்தீப மும்முப்பது |
| 32 | 5 | மடையணி யிரண்டரை] | மடைய னிரண்டரை |
| ,, | 10 | துர்க்காற்றே | துடக்கற்றே |
| 33 | 17 | மணகல்போ | மலைகள்போ |
| ,, | 28 | இருசமாள | வாளரி |
| 34 | 9 | நூறு | நாறு |
| ,, | 24 | கங்கொடுத்திடுசெயம்] | கஞ்செயச் செயமாமே |
| 35 | 2 | சலமேக | சகலமேக |
| ,, | 5 | சுத்திதுசெய்வன்னி[ | சுத்திசெய் வன்னி |
| ,, | 14 | போட்டிரவி | பொடிரவி |
| ,, | ,, | குடிரசம்நா | பொடிரசம்நா |
| ,, | 24 | காட்டி | கூட்டி |
| 36 | 3 | தாமதச் | தாமச் |
| ,, | 6 | தேன்ற | தோன்ற |
| ,, | 19 | ளமுதநீர் | ளிளநீர் |
| ,, | 21 | முப்பாலிஞ் | முலைப்பாலிஞ் |
| 37 | 2 | வாழைப் | வாளம் |
| ,, | 10 | மக்குச் | சுக்குச் |
| ,, | ,, | கடுமேல் வெண் முள்ளு | கடுவேலம் வாளுளி |
| ,, | 21 | கொதியரு நீருநீர் | கொதி யருநீர் |
| 38 | 3 | பேயப்புட வீராணி | பேய்ப்புடல் ரோகணி |
| ,, | 4 | தோய்தி கையிள | தோய்திக் கையானி |
| ,, | 26 | ரோம சத்துளி | தோமஞ் சித்துளி |
| 39 | 18 | ஈரஞ்சுர | பிரளுஞ்சுர |
| 40 | 11 | கெந்தளிக் | கொந்தளிக் |

| | | | |
|---|---|---|---|
| 40 | 26 | கற்ற தவன்பரி யொன்றியோ ரிருநால் | சுத்தத் தவளம் பரியொன் றினியீரெண்பல |
| ,, | 28 | வருத்த கஞ்சால் | வருத்து கருகாமல் |
| ,, | 29 | யேசாமங் | யீர் சாமம் |
| 41 | 3 | உரியவமுரிநீ | உரிய வமுதநீ |
| ,, | 7 | சுங்கங் | அங்கங் |
| ,, | 9 | பரவெதுப் | சுரவெதுப் |
| ,, | 24 | யரைத்த | யரைத்தப்பி |
| ,, | 25 | சுவெதன் பாலி | சுவேதனம் பாலிற். |
| 42 | 2 | மருத்துவச் | வருத்துவச் |
| ,, | ,, | லரைத்துநெட் டடபகத் | னயமா யரைத்துத் |
| ,, | 11 | மாகுறு | மாகுஞ் |
| ,, | 17 | கரிவெடி பருகி | பரிவெடி படிகி |
| ,, | 18 | வேம்பூ | பலம்பூ |
| ,, | 23 | சத்தத்திநீர் | சுத்தத்தீநீர் |
| ,, | 29 | வளைநவ | வளைகத் |
| 43 | 2 | பிணைவியற் | பிட்டவியற் |
| ,, | 3 | பொடிபொரு | பொடிவெறு |
| ,, | 24 | வுன்னித | வுள்ளி |
| 44 | 4 | பொரியக | பொரியச |
| ,, | 6 | முந்திய | முத்திய |
| 45 | 2 | டியதிலறு | ளதிலறு |
| ,, | 9 | சீரிப் | கீரிப் |
| ,, | 18 | வதிலுளி | மதிலுளி |
| 46 | 3 | ஆடித் துலர்த்தி | ஆம துலர்த்தி |
| ,, | 5 | தண்டே ரொழு | தண்டோ ரொரு |
| ,, | 9 | சட்டியுள் தட்டிடு | சட்டியு ளிட்டு |
| ,, | 26 | சோரும் | சோம |
| 47 | 6 | யோகமும் | லோகமும் |
| ,, | 10 | நீரினி லோடு | நீரிழி லோடு |

| | | | |
|---|---|---|---|
| 47 | 29 | புன்னைகள் | புன்னையள |
| 48 | 22 | கல்வீர | கலவீர் |
| 49 | 10 | கருங்கெந்தி | தருங்கெந் திட |
| ,, | 13 | யினியிற் | யினி |
| ,, | 15 | மாறம் | மாப்பாற் |
| 50 | 3 | குறிப்புடம் | குளிப்புடம் |
| ,, | 6 | நீருப்புப் | நீர்ப்பூப் |
| 51 | 12 | பழநீர் | பனினீர் |
| ,, | 24 | குரு க்குணங் | குறிகுணங் |
| 52 | 2 | தீயி லொக்குங் | தீயில் வெடிக்குங் |
| ,, | 12 | அப்பா | ஆப்பா |
| ,, | 19 | மாவிரண | மாவீரெண் |
| ,, | 24 | யுடன பாற்காளி | பாயுட னற்காளி |
| ,, | 27 | முன் | முன் |
| ,, | 29 | ரேழொன்றிற் | ரொவ்வொன்றிற் |
| 53 | 11 | சிவியிற் | சீவியின் |
| ,, | 15 | ஞாணத் | ஞாளத் |
| 54 | 21 | மேலுறக் கட்டிட | மேலுறத் தகடிட் |
| 55 | 4 | மருந்திடும் | மருந்தீடும் |
| 55 | 17 | செவ்வாய்ப் | செவ்வையாய்ப் |
| 56 | 3 | கங்கங் | தங்கங் |
| 57 | 22 | வெகுர்ந்திடும் | வெகுவிர்த்தி |
| 59 | 11 | நீரிழை | நீரினை |
| ,, | 16 | விண்ணீரில் புகட்டி | வின்னீரில் புஷ்டி |
| 60 | 16 | சுத்தம் பனமும் | சுகதம் பனமாம் |
| ,, | 19 | தூத் துவொடும் | தூற் றதுவோடு |
| ,, | 25 | பலசிங் | பாலசிங் |
| 61 | 2 | யுளவூசி தான்கவ்வும் | [ழூசிதான் கவ்வும் |
| ,, | 5 | சேர்த் திடு | சோதித் திடு |
| ,, | 9 | தாரை | தானரை |
| ,, | 13 | சுட்டிடப் | இட்டிடப் |

| | | | |
|---|---|---|---|
| 61 | 27 | துருக்கப் | துன்னைப் |
| 62 | 22 | கால | காய |
| ,, | 26 | கட்டில் | கட்டி |
| ,, | 28 | போலச்சந் | பாலசந் |
| 63 | 6 | நாட்ட | நாட்டவ் |
| ,, | 10 | நாள்வைத் | நாளம்வைத் |
| ,, | 18 | பேயபுக் | பேயபூக் |
| ,, | 27 | சிர் | சீர் |
| 64 | 7 | மாதிரம் | மாசுரம் |
| 65 | 4 | பேறுங் | பெருங் |
| ,, | 5 | மத்திக்குங் | மத்திக் |
| 66 | 2 | மான்றவீ | மாலைவீ |
| ,, | 24 | மூத்திரம் | மித்திரம் |
| ,, | 28 | மடித்ததி ராக் கெட்டுக் | மடித்ததிற் கெட்டுக் |
| 68 | 7 | நாளதில் | நாளத்தில் |
| ,, | 12 | கொருபரி | கொன்று |
| ,, | 14 | இடைபத்தி | இடைபத்த |
| 70 | 20 | தண்ணீர் | கொண்ணீர் |
| ,, | 22 | சுருக்கொடு | சுருக்கொரு |
| 72 | 15 | பருத்தியாம் | பருத்தியாம்பூ |
| ,, | 21 | வக்காவிடில் | சிவக்காவிடில் |
| 74 | 27 | மன் றுஞ்சாது | யிங்பயன் றுஞ்சாது |
| 75 | 20 | வாட்டு | வாட்டே |
| 76 | 10 | ரவியநான் | ரவியதால் |
| 78 | 5 | நாலதின் மாட்சி | நாகத் திடை மாட்சி |
| ,, | 8 | சீலை | சிலை |
| ,, | 9 | நரம் | நரும் |
| ,, | 11 | ரொண்ணுசி | ரேழுசி |

ஸ்ரீ சுப்ரமணியர்

அகஸ்தியருக்கு உபதேசஞ் செய்த

# கல் நண்டு சூத்திரம்.

உற்றதொரு சமுத்திரத்தி லேபிறந்த
உசிதமென்ற கல்நண்டா மதுசெய் செய்கை
கற்றவர்க ளறிவார்கள் அல்லால் வேறே
கசடருக்கோ வொருபோதுந் தெரியா தப்பா
குற்றமற்றோர் தெரிந்தெடுத்துச் செய்து கொள்வார்
கூறுகின்றேன் நன்றாக நீயுங் கேளு
சுத்தமாம் பொரிக்காரம் விராகன் ரெண்டில்
சூட்சமுடன் நல்லஜலம் படிதான் வாரே. 1

வாரப்பா எட்டொன்றாய்க் காய்ச்சி வற்றி
வண்மையாய்க்கல் நண்டுகுன்றி யளவுரைத்து
நேரப்பா அக்கஷாயத் திற்கரைத்து
நிலையாகக் கொடுக்கநீ ரடைப்புப் பின்னும்
பாரப்பா வென்சொல்வேன் கல்லடைப்பன்
படுத்தாது படுத்துநீர்ச் சுருக்கும் குத்தும்
ஆரப்பா பொறுக்கமுடி யாதே யென்று
அலைந்தபூமத் தன்மாங்கி சடைப்பும் போமே. 2

போமேதான் கிரிச்சனங்கள் பதினெட் டும்பின்
பொறுக்காத நீர்த்துன்ப மகன்று போகும்
பாமேவு தேனதில்கல் நண்டு தன்னைப்
பண்பினந்தி சந்திகுன்றி யளவு ரைத்துத்

தாமேதான் மத்தித்து முப்போ துண்ணத்
    தட்டழியும் பதின்மூன்று ஜன்னி யுந்தான்
நாமேதா னெனும்வாத மெண்ப துக்கு
    நலமாமூக் கரணைச்சா ரணையின் வேரே. 3

வேரான மாவிலிங்கம் பட்டை சேர்த்தக்
    கஷாயமதில் கல்நண்டு குன்றி கூட்டி
ஆரோடும் பேசாமல் மூன்று நாளும்
    அடைவுடனே அந்திசந்தி கொள்ளும் போது
ஊரோடு பகைத்தவன்போற் பறந்தே யோடி
    ஒழியுமடா வாதமெண் பதுவு மன்றே
நேராமிச் சூத்திரத்தை யறியொ ணாத
    நீசனிதன் மகிமைதனைக் காணான் தானே. 4

தானேதான் போகுதடா வாத மெல்லாம்
    தவறுதலே பண்ணிவைக்கும் குதிரை வாதம்
ஊனேதான் வாட்டிவைக்கும் யானை வாதம்
    உரவாதம் உற்பனங்கள் சொல்லும் வாயில்
கோனேதான் என்றிழுக்கும் நாடிப் பூட்டில்
    கோணியே முகத்திசிவு ஜன்னி வாதம்
நானேதான் என்றிழுக்கும் பிடரி வாதம்
    நரம்பிசிவு வீச்சதுவும் போகுந் தானே. 5

போச்சுதடா வுடல்வருத்த மதுவு மப்பா
    பொல்லாத வாயுவெல்லாம் எங்கே போச்சு
காய்ச்சலென்ற சுரங்களறு பத்து நான்கும்
    கஷாயமாம் சீரகத்தில் கல்நண் டூட்டிப்
பாச்சறுமுந் நாளந்தி சந்தி கொள்ள
    மாண்டுதடா சுரங்களெல்லாந் தீர்ந்திப் பாரில்
ஏச்சடையா இசைவளர்க்கு மைந்தா நீயும்
    இனிதாக இதனைமனங் கொள்வாய் தானே. 6

தானேதான் எலிச்செவியா மிலேயரைத்துத்
தப்பாமற் கொட்டைப்பாக் களவில் மைந்தா
ஏனேதா னென்ருமல் கல்நண் டைத்தான்
இயல்பாகக் குன்றியள வுரைத் தருந்த
ஊனேதான் தினும்வாத பித்த மையம்
உற்பனமாம் நீரிழிவோ டெல்லாந் தீரும்
தேனேதான் மொழியுடைய பெண்க ளுக்குத்
தினமுந்நா ளருந்தகர்ப்ப வாய்வு போச்சே. 7

போச்சுதடா குட்டமென்ற பதினேட் டுந்தான்
புகழ்பெரிய சிவன்வேம்பு தைலந் தன்னில்
வாய்ச்சுதடா வென்றுகா சளவி லப்பா
மகத்தான கல்நண்டு குன்றி சேர்த்து
ஏய்ச்சுதடா வென்றுநீ யிருந்தி டாமல்
இப்போதே யிரண்டுமொன்ருய் மத்தித் தேதான்
கீழ்ச்சுதடா மண்டலங்கால் கொள்ளும் போதே
கெட்டுதடா பதினெட்டுக் குட்டம் பாரே. 8

பாரப்பா பாடவரைச் சாற்றி லேதான்
பண்பான கல்நண்டு குன்றிசேர்த்துச்
சூரப்பா வென்றுமூன்று நாள்கொ டுக்கச்
சுத்தமுடன் தழுதணையாம் படைகள் முற்றும்
தீரப்பா வென்றுதுர் நீர்க ளெல்லாம்
திடம்பெரிய பெருவயிறு சேரப் போகும்
ஊரப்பா இல்லாதே யாறு காதம்
உத்தமனே யோடியது போச்சு போச்சு. 9

போச்சப்பா விஷமென்ற தெல்லாத் துக்கும்
புகழ்பெரிய தேள்பிட்டி யிலேயின் சாற்றில்
வாச்சுதுகல் நண்டுகுன்றி யளவு ரைத்து
வகையாகச் சேர்த்துநீ கொள்ளும் போது

மூச்சுறுநீர் சூழலகில் மகனே கேளாய்
முதிர்சுகமே பெருகுநெறி யறிவந்தெய்தல்
ஆச்சுதடா சொல்லுமகா விஷங்க ளெல்லாம்
அறுநூறு காதவழிக் கப்பால் போமே. 10

போமேதான் கிரிப்பூ டதனின் சாற்றில்
புகழான கல்நண்டு தன்னைச் சேர்த்து
வேமேதான் சகலவிஷ மெல்லாத் துக்கும்
விரும்பியே கொடுக்கவெருண் டோடிப் போகும்
நாமேதான் சொல்வோமுத் தமதா ளிப்பேர்
நல்லஇலைச் சாற்றினில்கல் நண்டு ரைத்து
ஆமேதான் என்றுசொல்லி கொடுக்கும் போது
அகன்றுபோம் பேய்நரி நாய் விஷந்தானே. 11

விஷமென்ற உன்மத்தம் பைத்தியம் போக
விளங்குதே சிச்சாற்றில் கல்நண் டேட்டி
நிசமென்று பன்னிரண்டு நாட்கொ டுக்க
நில்லாம லோடும்பைத் தியமுன் மத்தம்
நசலான குமரகண்டன் பரம கண்டன்
நாடாது போகவேயுத் தமதா ளித்தான்
இசலாமல் கொண்டுவந்து சார்பி ழிந்து
இன்பமுடன் கல்நண்டு தன்னைச் சேரே. 12

சேர்த்தபின்பு உழுந்தளவு எடுத்துக் கொண்டு
செய்யடா இரண்டுகண்ணில் கலிக்கம் போடு
பார்த்திருக்க வோடுமடா பதினெண் ணேயும்
பறந்துதடா விண்ணதனிற் பாரு பாரு
நாற்றிசைசொல் நந்தியா வட்டச் சாற்றில்
நலமான கல்நண்டு அதுவும் சேர்த்து
தீர்த்துமே யிரண்டுகண்ணி லேயு மப்பா
திடமாக எள்ளளவு எட்டு நாளே. 13

எட்டுநா ளிட்டவுடன் நேத்ர ரோகம்
எளிதாகப் போச்சுதடா தொண்ணூற் றாறும்
முட்டாமல் முருங்கைவிரை தைலந் தன்னில்
முழிப்பான கல்நண்டு சேர்த்த ரைத்துத்
தட்டாதே மத்தித்துக் கண்ணிற் போடத்
தட்டாமற் போச்சுதுகண் குருடு தானே
நட்டாதே பிள்ளையில்லா மலடி கட்கு
நற்பசும்பா லோடுகல்நண் டுரைத்துக் கூட்டே. 14

கூட்டியந்த மருந்தையிரு பதுநாட் கொள்ளக்
குறிப்பாகப் புத்திரபாக் கியமுண் டாகும்
தீட்டியவோர் ஜாதிக்காய்ப் பொடியு மப்பா
தீர்க்கமுடன் கல்நண்டு ரெண்டு மொன்றாய்த்
தாட்டியமாய்க் கூட்டியுண்ணு மூன்று நாள்தான்
தப்பாதே போகம்தம் பித்துக் கொள்ளும்
சேட்டமதாய்த் தேசிச்சா றதனிற் கொள்ளச்
சீக்கிரத்தி லிந்திரியம் கலித மாச்சே. 15

ஆச்சென்ற சகலஜன வசியம் பண்ண
அழகான சீதேவி யான சாற்றில்
பேச்சொன்று மின்றிக்கல் நண்டு கூட்டிப்
பிரியமுட னரைத்துவைக்க இதுபோற் செய்து
பேச்சொன்று மின்றிமந் திரத்துக் கெல்லாம்
முதலெழுத்தை நூறுதாம் உச்சரித்து
வாச்சென்று லலாடத்திற் றிலதம் வைக்க
வகைவகையா வுலகவசி கரமு மாமே. 16



## அறிக்கை.

இப்போது யூகிமுனி நூல் முந்நூறு அச்சாகி வருகின்றது. இன்னும் மூன்று மாதங்களில் (1-9-1915) வெளிவரும். விலை ரூபாய் ஒன்றாகும்; மேற்படி தேதிக்குள் முன் பணமனுப்புவோருக்கு அணா பன்னிரண்டிற்குக் கொடுக்கப்படும்.